பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 20 புதன்கிழமை (04-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:253

## கிளிநொச்சிச் செயலகம் முன்பாக பட்டதாரிகள் நேற்று மறியல் போர்

- உதயன் கிளிநொச்சி, வட்டக்கச்சி செய்தியாளர்கள் -

கிளிநொச்சி,ஓக.4

பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்குவதில் கிளிநொச்சி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து கிளிநொச்சி மாவட்ட பட்டதாரிகள் போராட்டத்தில் குதித்திருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகம் நேற்று பட்டதாரிகளால் முற்றுகைக்குட்பட்டது. காலைமுதல் செயலகம் முன்பாக திரண்ட பட்டதாரிகள் செயலகத்தின் பிரதான வாயிலை அடைத்தவாறு மறியற்போரில் ஈடுபட்டதால் செயலகப் பணிகள் முடங்கின. பணியாளர்கள் எவருமே கடமைக்காக செயலகத்தினுள் செல்ல முடியவில்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் ஏழாவது வினாத்தாள் இன்றைய உதயனுடன் வெளிவருகின்றது.

பிரதி புதன்கிழமைகள் தோறும் தொடர்ந்து வினாத்தாள்கள் வெளிவரும். வினாத்தாள்களின் மேலதிகப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உதயன் பணிமனையில் அலுவலக நேரத்தில் விநியோகப் பகுதியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

# அரசுக்கு ஆதரவளிக்கும் எண்ணத்தை அடியோடு கைவிட்டது ஐ.தே.கட்சி!

## தனது எம்.பிக்களிடம் ரணில் தெரிவிப்பு



கொழும்பு,ஒகஸ்ட் 4

**இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிகள் தொடர்பான விடயத்தில் அரசுத் தரப்புக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் தனது நிலைப்பாட்டிலிருந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி விலகிக் கொண்டுள்ளது.**

**அக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்தத் தகவலை வெளியிட்டார்.**

ஐ.தே.கட்சி எம்.பிக்களின் கூட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. அப்போதே இந்தத் தகவலை ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சி அப்படியே ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அதன் அடிப்படையில் புலிகளுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு அது ஆதரவு தெரிவித்திருந்தது.

ஆனால், ஜனாதிபதி இந்த யோசனையை

(16ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானப் பிரேரணை வடமேல் மாகாண சபையில் தோல்வி!

புத்தளம்,ஒக.4

சமாதானத்தை வலியுறுத்தும் பிரேரணை வடமேல் மாகாண சபையில் தோற்கடிக்கப்பட்டது.

வடமேல் மாகாண சபையின் அமர்வு நேற்று பிரதித்தலைவர் சோமசிறி குணதிலக தலைமையில் கூடியது. அப்போது ஐ.தே.மு. உறுப்பினர் காமினிசோமசிறி ஏக்கநாயக்க இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சைஅரசும் புலிகளும் தொடர்ந்து முன்னெடுக்க இந்தச் சபை வேண்டுகோள் விடுக்கிறது என்ற பிரேரணையை சபையில் சமர்ப்பித்தார். இப்பிரேரணை மீது காரசாரமான விவாதம் இடம்பெற்றது. ஸ்ரீலங்கா முஸ

(16ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணப்பித்த பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனம் நிச்சயம்

### நிதி அமைச்சர் உறுதி

கொழும்பு,ஒக.4

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் தெரிவான பட்டதாரிகள் பயிலுநர்களாகவே சேர்க்கப்படுவர் என்று நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று நடநத சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரைச் சந்தித்தனர்.

பட்டதாரிப பயிலுநர் நியமனத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாரபட்சம், முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என கூட்டமைப்பினர்

(16ஆம் பக்கம் பார்க்க)

### கோப்பாயில் வீதி விபத்து: ஒருவர் உயிரிழப்பு!

கோப்பாய்,ஒக.4

கோப்பாய் தெற்கில் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் தலையில் படுகாயமடைந்து உயிரிழந்தார்.

பருத்தித்துறை வீதியில் உள்ள மாதா கோவிலடியில் நேற்றுப்பிற்பகல் 2.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில் அதே இடத்தைச் சேர்ந்தவரான பூதப்பிள்ளை நாகரட்ணராஜா (வயது-40) என்பவரே பலியானார்.

இவர் வாசிகசாலை ஒன்றில் பத்திரிகைகள் வாசித்துவிட்டுத் துவிச்சக்கரவண்டியில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் குறித்து அரசு புலிகளுடன் பேசுவதை எதிர்க்காதீர்!

### ஜே.வி.பியிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஒக.4

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தனனாட்சி அதிகார சபையின் அடிப்படையில் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை அரசு ஆரம்பிப்பதற்கு அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும் ஜே.வி.பி. பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு நடந்த முக்கிய சந்திப்பில் இவ்வாறு ஜனாதிபதி கூறினார் எனச் செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி தரப்பில் அமைச்சர்கள் கதிர்காமர், சுசில் பிரேமஜயந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் ஈ.பி.டி.பியின் அலுவலகம் மீது குண்டு வீச்சு!

### கான்ஸ்டபிள் உட்பட நால்வர் காயம்

கொழும்பு,ஒக.4

வாழைச்சேனையில் உள்ள ஈ.பி.டி.பி.அலுவலகத்தின் மீது நேற்றுக்காலை 7.30 மணியளவில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலின் போது பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட 4பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் அலுவலகப் பொறுப்பாளர் சிவா (கந்தசாமி அந்துனன்) படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த மற்றைய நால்வரில் ஒருவர் பொலீஸ் கான்ஸ்டபிள் என்றும், மூவர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த நால்வரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச்

(16ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

இச்சலுகை 2004 ஒக்டோபர் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.
- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.



NSB NSB

# யாழ். நகரை சகல வசதிகளுடனும் கட்டியெழுப்புவதே முக்கிய பணி

## மாநகராட்சியின் புதிய ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.4

யாழ்நகரை சகல வசதிகளுடனும் கட்டியெழுப்புவதே எனது முக்கிய நோக்கம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாநகர சபையின் புதிய ஆணையாளராகப் பொறுப்பேற்றிருக்கும் கலாநிதி க.குணராஜா.

யாழ்.மாநகரசபையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு நகரத்திற்கு நிகராக யாழ்நகரம் முன்னர் விளங்கியது. அதன் இன்றைய நிலையைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கின்றது. ஏனைய பகுதிகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி யாழ். பட்டணப் பகுதியில் ஏற்படவில்லை.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் என்பதனை விட இப்பிரதேசத்தில் வாழ்பவன் என்ற அடிப்படையில் இப்பகுதியில் காணப்படும் சில பிரச்சினைகளை இனம் கண்டுள்ளேன். அவற்றை முன்னுரிமைப்படுத்தி நிவர்த்தி செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் துரித கதியல் மேற்கொள்ளப்படும்.

'பிளாஸ்ரிக்' பொருள்கள் போன்ற சேதனப் பொருள்களைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கும் ஒரு திட்டத்தை புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சு யாழ். குடாநாட்டில் செயற்படுத்தவுள்ளது. அதன் மூலம் நகரப் பகுதியில் ஒன்று சேரும் கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்தக்கூடிய நிலை ஏற்படும்.

மாநகர எல்லைக்குள் முன்னர் நாற்பதுக்கும் மேற்பட்ட குளங்கள் காணப்பட்டன. அவற்றில் தற்போது 30 குளங்களே பயன்பாட்டிலுள்ளன. ஏனையவை இருந்த இடம் தெரியாது மறைந்துவிட்டன.

தற்போது உள்ள நிலைமைக்கேற்ப கால்வாய்கள் உருவாக்கப்படவேண்டும். இப்பிரதேசத்திலுள்ள கால்வாய்கள் மற்றும் குளங்களைப் புனரமைப்பதற்கு யாழ். மாவட்ட அரச அதிபரின் சிபார்சின் மூலம் புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளது.

அதன் மூலம் இப்பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வுகாணப்படும் என நம்புகின்றேன்.

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் நடைபாதை வியாபாரிகளின் பயன்பாட்டிற்கென புதிய இடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அது மட்டுமல்ல ஒலிபெருக்கிகளின் ஆதிககம் அதிகரித்துள்ளதாக பொதுமக்களினால் யாழ்.மாநகரசபை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்யப்படுகிறது.

அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை கரையோரப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் குடிதண்ணீர், வதிவிடப் பிரச்சினை இனங்கண்டு அவற்றிற்கு துறைசார்ந்த திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நிவர்த்தி செய்யலாம் என்று நம்புகின்றேன்.

இப்படித் தெரிவித்தார் புதிய ஆணையாளர். (ஒ-5)

### அதிபர்கள் கூட்டம் ஒத்திவைப்பு

தென்மராட்சிப் பாடசாலை அதிபர்களுக்கு இன்று நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும் என்று தென்மராட்சி வலயப் பணிப்பாளர் தெரிவித்தார்.(ஐ-3-31-117)

### பயணிகள் சேவையில் விரைவில் 'குமுதினி'

பயணிகள் சேவையில் 'குமுதினி' படகு அடுத்தவாரம் தொடக்கம் மீண்டும் ஈடுபட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்படகில் சில திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக இச்சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடும் கெரி தீவிர புலி ஆதரவாளரா?

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஜோன் கெரி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஒருவரென அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தமிழ்ச் சங்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவினால் வியட்நாமில் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பை ஜோன் கெரி கடுமையாக விமர்சித்துள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழ்ச் சங்கம், இத்தகைய ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியாக வருவாரானால் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நலன்களை முன்னிறுத்தியே செயற்படுவாரெனவும் தெரிவித்துள்ளது.

வியட்நாம் போரில் அமெரிக்காவுக்காகத் தீரத்துடன் போரிட்ட முன்னாள் படைவீரர் ஜோன் கெரி. ஆனால், வியட்நாமை ஆக்கிரமித்த அமெரிக்க நடவடிக்கையை அவர் கடுமையாக விமர்சித்து வந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இவ்வருட இறுதியில் நடைபெறுகின்றது.

குடியரசுக் கட்சி வேட்பாளரும், தற்போதைய ஜனாதிபதியுமான ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷுக்கும் ஜோன் கெரிக்கும் இடையில் இத்தேர்தலில் கடும்போட்டி நிலவுகிறது எனக் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன. (க)

## ------ இந்தியா திருப்பி அனுப்பிய சம்பவம்: ------

# ஈழவேந்தனின் ஒழுங்குப் பிரச்சினை இன்று நாடாளுமன்றுக்கு வருகிறது

தூதாண்மைக் கடவுச் சீட்டில் சென்னை சென்ற தன்னை அங்கு இந்திய நாட்டுக்குள் நுழையவிடாமல் திருப்பி அனுப்பியதன் மூலம் தனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான ஈழவேந்தன் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பியிருக்கிறார்.

இந்த விவகாரம் இன்று நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் பின்னர் கவனத்துக்கு எடுக்கப்படவிருக்கின்றது.

தமது நாடாளுமன்றச் சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான ஒழுங்குப்பிரச்சினையை இனறு நாடாளுமன்றத்தில் கிளப்புவதற்கான முன்னறிவித்தலை ஈழவேந்தன் நேற்று சபாநாயகருக்கு எழுத்துமூலம் வழங்கினார்.

அதற்குச் சபையில் இன்று அனுமதி அளிப்பதற்கு சபாநாயகர் இணங்கியுள்ளார் என அவர் தெரிவித்தார்.

சென்னை விமான நிலைய அதிகார வர்க்கத்தினர் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டதால் தனக்கும் இந்திய - இலங்கைத் தரப்புக்களின் நல்லுறவுக்கும் ஏற்பட்டுள்ள - ஈடு செய்ய முடியாத பாதிப்புக் குறித்து இந்தியாவின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டிய தன் அவசியத்தையும் சபாநாயகருக்கு தாம் எழுதியுள்ள கடிதத்தில் ஈழவேந்தன் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

## கறுப்புப் பட்டியுடன் முஸ்லிம் எம்.பிக்கள்

கொழும்பு,ஓக.4

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கறுப்புப் பட்டி அணிந்து நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தனர்.

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற காத்தான்குடி பள்ளிவாசலில் படுகொலைகளின் நினைவுதினத்தை ஒட்டி துக்கத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தனர்.

## தமிழக வியாபாரி ஒருவருக்கும் எச்.ஐ.வி.தொற்றெனச் சந்தேகம்

யாழ்ப்பாணம்,ஓக.4

'எயிட்ஸ்' நோய்க் கிருமியான எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சையின்போது இனங்காணப்பட்டுள்ளார். 50 வயதான குடும்பஸ்தர் ஒருவரே எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர் என்று சந்தேகிக்கப்படுகிறார்.

கடந்த 26 ஆம் திகதி காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. தமிழகத்தைச் சேர்ந்த இவர் புடைவை வியாபாரத்திற்காக கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்தார் என்று கூறப்படுகின்றது.

கடந்த சில நாள்களுக்குள் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டாவது நபர் யாழ். மருத்துவமனையில் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-7)

# கிழக்கில் முஸ்லிம்கள் நேற்று முழு ஹர்த்தால்

கொழும்பு, ஓக.4

ஷுஹதாக்கள் தின நினைவாக நேற்று செவ்வாய்க்கிழமை கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், மருதமுனை, சம்மாந்துறை, ஒலுவில் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, மூதூர், கிண்ணியா ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கை முற்றாகப்பாதிக்கப்பட்டது.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி காத்தான்குடியிலுள்ள இரண்டு பள்ளிவாசல்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் பலியான 103 முஸ்லிம்களின் நினைவாக இந்த ஷுஹதாக்கள் தினம் நினைவுகூரப்பட்டது.

நேற்று அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் முஸ்லிம் பாடசாலைகள் எவையும் இயங்கவில்லை. பொதுச்சந்தைகள், கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

கல்முனையில் அரசாங்கக் காரியாலயங்கள், வங்கிகள் எவையும் செயற்படவில்லை.

கிழக்கு முஸ்லிம் பகுதிகள் எங்கும் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

கல்முனையிலிருந்து போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த பஸ்கள் மற்றும் படையினர் அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் கல்முனைக் குடியில் வைத்து கல்வீச்சுக்கு இலக்கானதால் வாகனப் போக்குவரத்துக்கள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

கல்முனையிலிருந்து சென்ற நியூ ஈஸ்டன் பஸ் கம்பனிக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும் சாய்ந்தமருதில் வைத்து கல்வீச்சுக்கு இலக்கானது.

பஸ்போக்குவரத்து இடம்பெறாததால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. பல இடங்களில் வீதித்தடைகளைப் போட சில இளைஞர்கள் முயற்சித்தனர். ஆனால், பொலீஸார் தலையிட்டு வீதித் தடைகளை அகற்றினர்.

விசேட அதிரடிப்படையினரும் பொலீஸாரும் வீதிக்கு வீதி நிறுத்தப்பட்டிருந்தனர். ரோந்து நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

'முஸ்லிம் தேச ஷுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனம்' நேற்றைய தினத்தை துக்க நாளாக பிரகடனம் செய்திருந்தது.

நேற்று இரண்டாவது நாளாக அம்பாறை கரையோரப் பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டமையினால் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (க)

## விழிப்புக்குழுவுக்கு அச்சுறுத்தல்

கோண்டாவில் பகுதியில் கடமையாற்றிய விழிப்புக்குழுவினர், சிலரின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகினர் என்றும் கூறப்படுகின்றது.

கோண்டாவில் தென்மேற்கு கிராம அலுவலர் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்ற களவுகளைத் தொடர்ந்து சுன்னாகம் பொலீஸாரின் அனுசரணையுடன் கிராம அலுவலரினால் அப்பகுதி மக்களை உள்ளடக்கி விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவினர் இரவு நேரங்களில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

சமீபத்தில் இரவுநேரக் கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டு இருந்த விழிப்புக்குழு உறுப்பினர்களை இளைஞர்கள் சிலர் அச்சுறுத்தினர் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாக அப்பகுதிக் கிராம அலுவலரிடமும் பொலீஸாரிடமும் முறையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-68)

# யாழ். மருத்துவமனையில் மீண்டும் 'பேஸ் மேக்கர்' கருவிமூலம் சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஓக.4

சீர்குலைந்த இதய இயக்கத்தை 'பற்றரி' மூலம் இயக்கும் கருவி (Pace Maker) மூலம் சீராக்கும் சிகிச்சை நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளி ஒருவருக்கு வழங்கப்பட்டது. இச்சிகிச்சைக்குத் தேவையான கருவிகள் யுத்தசூழ்நிலை காரணமாக குடாநாட்டுக்கு எடுத்துவரப்படாமலிருந்தது. அதனால் இச்சிகிச்சை வழங்குவது யாழ். போதனா வைத்தியசாலையில் தடைப்பட்டிருந்தது. தற்போது இச்சிகிச்சை முறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அலரி விதையை உட்கொண்டதால் இதய இயக்கம் பாதிக்கப்பட்ட இளம்பெண் நோயாளி ஒருவருக்கே இச்சிகிச்சைமூலம் இதய இயக்கம் சீராக்கப்பட்டது. மார்புநோய் சிகிச்சை நிபுணர் செல்வி கௌரி செல்வரட்ணம் இச்சிகிச்சையை மேற்கொண்டார்.

இதேவேளை, இந்தக் கருவிபோன்ற மேலும் பல நவீன கருவிகள் யாழ். மருத்துவமனைக்குக் கிடைத்தால் பல உயிராபத்துக்களைத் தடுக்க முடியும் என்றும் -

இதற்கு தனியார்களோ, அமைப்புகளோ உதவமுன்வந்தால் சமூகத்துக்குப் பெரும் பயனளிக்கும் என்றும் -

மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-15)

# களுவாஞ்சிக்குடியில் பட்டதாரிகள் நேற்று 3 ஆவது நாளாக மறியல்!

கொழும்பு,ஓக.4

பட்டிருப்பில் வேலையற்ற பட்டதாரிகளின் ஆர்ப்பாட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

இவர்கள் மண்முனை, தென் எருவில்பற்று, களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் அமர்ந்தவாறு, பிரதேச செயலகத்தைத் திறக்கவிடாமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பிரதேச செயலக அலுவலகப் பணிகள் நேற்று மூன்றாவது நாளாகவும் தடைப்பட்டன.

நேற்று ஓய்வூதியம் வழங்கும் தினம் என்பதனால், ஓய்வூதியம் பெறுபவர்களால் அதனைப் பெறமுடியவில்லை.

வீதியில் அமர்ந்தவண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்துகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

பொலீஸார் போக்குவரத்திற்கு வழிவிடுமாறு பட்டதாரிகளைக் கேட்டுக்கொண்டபோதிலும், அவர்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை.

இப்போராட்டத்தில் 400 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

### வீதி விபத்தில் பெண் காயம்

வேலைக்குச் சென்று கொண்டிருந்த வேளையில் 'கன்ரர்' வாகனத்தினால் மோதுண்டு பெணொருவர் படுகாயமடைந்தார்.

மல்லாகம் சந்தியருகே நேற்று நடைபெற்ற இந்த விபத்தில் தெல்லிப்பழை வைத்தியசாலை ஊழியரான கந்தரோடை ஐயனார் வீதியைச் சேர்ந்த சுமதி நவநீதன் (வயது 31) என்பவரே படுகாயமடைந்தவராவார். காயமடைந்தவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (10-45)

## உதயன்

# கருணா பெயரில் ஒரு துணைப்படை

தென்னிலங்கை ஊடகங்களும், இந்திய ஊடகங்களும் - அவற்றுடன் சேர்ந்து தமிழ் ஊடகங்களும்கூட - இன்றைய அரசியல் நிலைமையில் அடிக்கடி பயன்படுத்தும் ஒரு குறியீட்டுச் சொல் - 'கருணா குழு'.

'கருணா குழு' என்ற பெயரைக் குறிப்பிட்டு ஊடகங்கள் வெளியிட்டுவரும் செய்திகளை வாசிக்கும் - அல்லது கேட்கும் வாகசர்களுக்கும், நேயர்களுக்கும் கருணாவின் தலைமையில் ஓர் ஒழுங்கமைப்பான கட்டமைப்பு இயக்கச் செயற்பாடு கொண்ட ஒரு கோஷ்டி இருப்பது போன்ற ஒரு மாயை - பிரமை - ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

அது தவறானது என்பதுதான் உண்மை.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட - தனிமனிதப் பிறழ்வான - கருணா என்ற தனி ஆள், இயக்கத்தில் தனக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பதவி, அந்தஸ்து, அதிகாரம் போன்றவற்றைப் பயன்படுத்தி 41 நாள்கள் கிழக்கிலங்கையில் அட்டகாசம் புரிந்ததும் -

விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கையை அடுத்து அந்த இடத்தை விட்டு அவர் தமது சகாக்கள் சிலரோடு தப்பி ஓட்டம் பிடித்ததும் -

நடந்து முடிந்த கடந்த காலச் சம்பவங்கள்.

கருணாவின் அந்த 41 நாள் அராஜகத்துக்குத் துணைபோன குற்றத்துக்கு அஞ்சி அவரோடு சேர்ந்து ஒரு சிறு எண்ணிக்கையினர் இயக்கத்தை விட்டு வெளியேறினர் என்பதும் உண்மையே.

ஆனால், தன்னோடு வந்தவர்களையோ, கிழக்கிலங்கையில் தனித்தனியாக - ஆங்காங்கே - இயக்கத்தை விட்டு வெளியேறியவர்களையோ ஒன்றுசேர்தது, ஒருங்கமைத்து, ஒரு கட்டுக்கோப்பை ஏற்படுத்தும் திறமையோ, வாய்ப்போ, சந்தர்ப்பமோ கருணா என்ற தனிமனிதருக்கு இருக்கவேயில்லை.

சிலர் வந்த வழி திரும்பி ஓட்டம் பிடித்தனர்; சிலர் புலிகளிடம் தஞ்சம் புகுந்து, ஏற்கனவே செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் தேட விழைந்தனர்; மேலும் சிலர் உயிர்துறக்க வேண்டியவர்களாகினர்; மற்றும் சிலர் 'நல்ல பிள்ளைகளாக' வெளிநாட்டுக்குப் பறந்தனர்.

கருணாவைப் போல ஒரு சிலர் இன்னும் ஆங்காங்கே மிஞ்சியிருக்கக்கூடும். ஆனால், அவர்கள் அனைவரும் கருணா என்ற தனிமனிதரின் கட்டுக்கோப்பு வழிகாட்டலில் இல்லை என்பதுதான் உண்மை.

என்றாலும், அத்தகையோருக்கு இடையில் ஓர் இணைப்பை ஏற்படுத்தும் ஒரு கூட்டு இருக்கின்றது. ஆனால், அந்தக் கூட்டு கருணா அல்லர். அப்படியானால் அவர் அல்லது அது யார்?

இலங்கை அரசின் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஓர் அங்கம்தான் அது.

கருணா ஏற்படுத்திய குழப்பத்தின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறியவர்களை அல்லது வெளியேற்றப்பட்டு ஆங்காங்கே சிதறிக் கிடந்தவர்களை ஒருங்கு சேர்த்து, தனக்கு விரும்பிய நடவடிக்கைகளுக்கு - விரும்பியவகையில் - பயன்படுத்துகிறது புலனாய்வுப் பிரிவு.

அந்தச் செயற்பாடுகளுக்குத்தான் 'கருணா குழு' என்று முலாம் பூசுகின்றது இராணுவப் புலனாய்வுப் பிரிவு என்கின்றன புலிகளின் வட்டாரங்கள்.

தன்னுடைய பாதுகாப்புக்கே வேறு வழியின்றி ஒன்றும் செய்யமுடியாமல் - படைத்தரப்பிடம் சரணாகதி அடைந்திருக்கும் கருணா என்ற தனிநபருக்கு ஓர் இராணுவக் கட்டமைப்பு அணியை உருவாக்கக்கூடிய தகுதி, வசதி, வாய்ப்பு இன்று இல்லை. ஆனால், அந்தக் கருணா என்ற நபரையும், புலிகள் இயக்கத்தில் அவர் செயற்பட்ட சமயம் அவருக்கு இருந்த செல்வாக்கு, அதிகாரம், அவற்றின்மூலம் இயக்க உறுப்பினர்களுக்கு அவர் மீது இருந்த பற்றுதல் - பிடிப்பு - ஆகியவற்றையும் பயன்படுத்தித் தனக்கு வாய்ப்பான ஒரு துணைப்படையை உருவாக்க அரசுத் தரப்பு முயல்கின்றது என்பதே நிஜம்.

எனவே, கருணாவின் பெயரில் இப்போது உருவாக்க முயற்சி எடுக்கப்படுவது 'கருணா குழு' என்ற - கருணா தலைமையிலான - ஓர் அமைப்பு அல்ல. அந்தப் பெயரில் அரசுப் படைகள் தமக்கென உருவாக்க முயலும் ஒரு துணைப்படைதான் அது.

அதைத்தான் புலிகள் தமக்கு எதிராக ஆள்வைத்து யுத்தம் நடத்த (War On Proxy) எடுக்கப்படும் அரசுத் தரப்பு முயற்சி என்று விமர்சித்திருந்தார்கள்.

தெரிந்தோ, தெரியாமலோ இந்தத் துணைப்படை ஆக்கத்திற்கு உதவி செய்தவர்கள், உதவி செய்ய எண்ணுபவர்கள், இந்த விடயத்தை ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

தமிழ்த் தேசியத்துக்கு எதிரான பேரினவாத சக்திகளின் துணைப்படைக்குப் பங்களிப்பதில் இருக்கக்கூடிய நீதி, நியாயங்களையும், அதன் மூலம் தாம் ஆற்றப்போகும் வரலாற்றுத் துரோகத்தையும் அவர்கள் கணக்கெடுப்பார்களாயின் அந்தத் திசையை ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள் என்பது நிச்சயம்.

# அரசின் கல்வித்துறைப் பாரபட்சமே விடுதலைப் போருக்கு வித்திட்டது!

## கிளிநொச்சி மாவட்டப் பட்டதாரிகள் மகஜர்

கிளிநொச்சி,ஓக.4

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதில் கிளிநொச்சி மாவட்டத்தைத் தொடர்ந்தும் அரசு புறக்கணித்தால் தொடர்ச்சியான வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிவரும். தமிழர்களது விடுதலைப் போராட்டம் இதுபோன்ற கல்வித் துறைப் பாரபட்சங்கள் காரணமாகவே உயிர்ப்புப் பெற்றது என்பதை அரசு உணர வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றது கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம்.

நேற்று முற்பகல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டு நடத்தப்பட்ட போராட்டத்தின் முடிவில் கையளிக்கப்பட்ட மகஜரில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மகஜரின் முழு விவரம் வருமாறு:-

அரச துறைகளில் பொருத்தமான வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை நியமனம் செய்தமை தொடர்பில் எந்தவொரு கிளிநொச்சி மாவட்டப் பட்டதாரிகளும் இடம்பெறாமை அரசின் திட்டமிட்ட புறக்கணிப்பாகவே அமைகின்றது. யுத்தநெருக்கடிகளுக்கும் அரசின் இறுக்கமான பொருளாதாரத் தடைகளுக்கும் மத்தியில் கல்வி கற்றுப் பட்டம்பெற்ற கிளிநொச்சிப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டமை அரசின் பாரபட்சப் போக்கையே எடுத்துக் காட்டுகின்றது.

17 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கிய அரசு வெறுமனே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்ற ஒரேயொரு காரணத்தினாலேயே நியமனம் வழங்கவில்லை என்பது வெளிப்படையான உண்மை. இந்த நிலையில் ஸ்ரீலங்கா அரசு எந்தவகையில் புலிகளுடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமென நாம் நம்புவது? விடுதலைப் போராட்ட வரலாறு கல்வித் தரப்படுத்தலாலேயே உயிர்ப்புப் பெற்றது என்பது யாவரும் அறிந்த விடயம். இதேபோன்றே நியமனத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டமை கிளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வழிகோலும் என்பதை அரசுக்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

நேர்முகத் தேர்வுப் பட்டியல், குறித்த திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன் நேரடியாக உரிய அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டபோதும் சாட்டுப் போக்கு சொல்வதற்காகவும் அரசின் திட்டமிட்ட புறக்கணிப்பை நியாயப்படுத்துவதற்கும் செய்தி ஊடகங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய செய்தி முற்றிலும் உண்மைக்கு மாறாக இருப்பதனால் அதனை வன்மையாக கண்டிக்கின்றோம். பொறுப்பற்ற விதத்தில் அறிக்கைகள் விடுவதானது தொடர்ச்சியான தமிழினத் துரோகப் போக்கினையே காட்டுகிறது. எனவே கிளிநொசசி மாவட்டப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க சம்பந்தப்பட்டவர்கள் குரல் கொடுக்கவேண்டுமெனக் கோருகின்றோம். நியமனத்தில் தொடர்ந்தும் புறக்கணிப்பு இடம்பெறுமானால் வெகுஜன போராட்டங்களில் பட்டதாரிகள் ஈடுபடும் நிலை உருவாகும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றோம்.

- இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-305)



குடாநாட்டில் கடும்வெயில் தகிக்கிறது. வெப்ப கால நிலையால் பொதுமக்கள் பெரிதும் வாடி வதங்குகின்றனர். இளநீர் வாங்கிப் பருகித் தாகம் தீர்க்கமுனையும் ஒருவரையே படத்தில் காண்கிறீர்கள். யாழ்.நகரில் இளநீர் மற்றும் குளிர்பான விற்பனை சூடுபிடித்துள்ளது. *(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## சமூகப் பணி தொடர்பான டிப்ளோமா பாடநெறி

வலி.தெற்கு,ஓக.4

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் நடத்தப்படும் சமூகப்பணி தொடர்பான டிப்ளோமா பாட நெறிக்கு ஆள்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக புகுமுகத்துக்குரிய விண்ணப்பத் தகுதியை அடிப்படையாகக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பத்தகுதி உடையவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் 'பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், 191, தர்மபால மாவத்தை, கொழும்பு - 07" என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு மேற்படி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் என்.ஜி.ரத்நாயக்கா அறிவித்துள்ளார். (ஐ-152)

# பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் காணாமல் போனோர் பற்றிய விவரம் சேகரிப்பு

யாழ். மாவட்டத்தில் படையினரால் கைதாகிப் பின்னர் காணாமற்போனோர் தொடர்பான விவரங்கள் யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் ஆதரவுடன் சேகரிக்கப்படவுள்ளன.

பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் ஆதரவுடன் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேற்படி விவரம் சேகரிப்புப்பணிகள் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2மணி வரை பின்வரும் இடங்களில் இடம்பெறும் என்றும் -

காணாமற் போனவர்களின் பெற்றோர், உறவினர், பாதுகாவலர்கள் உரிய இடங்களுக்குச் சமுகமளித்து விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தோர் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் -

யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தவுப்பகுதியைச் சேர்ந்தோர் "திருமதி சு. கமலநாயகி, செயலாளர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம், [illegible] கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்" என்னும முகவரியிலும் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்று - அறிவிக்கப்பட்டுள்ளது. [illegible])

# பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் 'மைக்றோ பிலிமில்' பதிவு செய்யப்படும்

யாழ்ப்பாணம்,ஓக.4

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பிறப்பு, இறப்பு, விவாகம் மற்றும் காணிப் பதிவுச் சான்றிதழ்கள் நுண்படப் பிரதிகளாகப் (மைக்றோ பிலிம்ஸ்) பதிவு செய்யப்படவுள்ளன. அதன் பின்னரே இந்தப் பணிகள் பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்படவிருக்கின்றன.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் இத் தகவலைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அரச அதிபர் மேலும் கூறியதாவது:-

அனுராதபுரத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமர சிறி தொடங்கொட கலந்துகொண்டார். எனது தலைமையில் யாழ். செயலக அதிகாரிகள் குழு ஒன்றும் அதில் பங்குபற்றியது.

யாழ். செயலகத்தில் செயற்படும் பதிவாளர் பணிமனைப் பணிகளை பிரதேச செயலாளர்களுக்குப் பன்முகப்படுத்தும் படி அமைச்சர் எம்மிடம் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் பதிவுகள் பல சேதமடைந்தன. ஒரே இடத்தில் பதிவுகள் பேணப்பட்டதால் அவற்றைப் பாதுகாக்க முடிந்தது.

எதிர்காலத்தில் இந்தப் பணியைப் பன்முகப்படுத்த முன்னர் பதிவுகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அமைச்சரிடம் தெரிவித்தேன்.

அதை ஏற்றுக்கொண்ட அமைச்சர் பதிவுகள் யாவற்றையும் 'மைக்றோ பிலிமில்' பதிவு செய்த பின்னர் பதிவுகளைப் பன்முகப்படுத்தும் படி தெரிவித்தார் என்றார் அரச அதிகாரி. (ஐ-3)

### நாளை

ஆடி 21
வியாழக்கிழமை
(05.08.2004)
திதி : பஞ்சமி
மாலை 6.13 வரை.
நட்சத்திரம் : உத்தரட்டாதி
பிற்பகல் 1.41 வரை.
சுபநேரம்: 7.34 - 9.04
ராகுகாலம்: 01.34 - 3.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு பொய் வாழ்வதற்கு மேலும் ஒன்பது பொய்களை அதற்கு உணவாக வழங்கவேண்டும்.

**JAFFNA SCIENCE ASSOCIATION PURE SCIENCES**
**(Section - A)**

# POPULAR LECTURE

Application of Physics in Medicine:
**Physics of Radiation Therapy**

Speaker: **Dr. Thavendra Rajah**
Mount Carmel Medical Center
Ohio, U.S.A.

Venue: **Lecture Hall I, Department of Chemistry, University of Jaffna.**

Date: **5th August 2004 (Thursday) at 3.00 p.m.**

**Please all are Welcome**

விளம்பர அனுசரணையாளர்:

**விண்மீன் அங்காடி**
பிரதான வீதி, நெல்லியடி
T.P.: 021 - 226 - 3027
Dealers in Ceramic, Hardware, Paint Agrochemicals.

(26-14-18) (34868)



**சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்**
**பணிமனை - யாழ்ப்பாணம்.**

## கேள்வி அறிவித்தல்

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளரால் பின்வரும் கேள்விகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | மீளளிக்கப்படாத கட்டுநிதி | மீளளிக்கப்படும் கட்டுநிதி |
|---|---|---|
| குழாய்க் கிணறு அமைத்து பம்பி பூட்டுதல் | 100/= | 1000/= |

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை
மானிப்பாய் - 12 கிணறுகள்

தெல்லிப்பழை - 12 கிணறுகள்

**வீண்ணப்ப முடிவுதிகதி - 17-08-2004 மு.ப.10.00**
**படிவம் பெற்றுக்கொள்ளும் இறுதித்திகதி - 16-08-2004 பி.ப.3.00**

இதற்கான விண்ணப்பப்படிவங்களை எமது பணிமனையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்கள் பணிமனையிலும் சுகாதார வைத்திய அதிகாரி மானிப்பாய், தெல்லிப்பழை அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்தியகலாநிதி
க.தா.சிவபாதம்,
பதில் மாகாணப் பிரதிப்பணிப்பாளர்.

(C/36413)(42-14-18-26)



**பாலையூர்**
**மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்**

முதலாம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு இல. 2762<br>2 ஆம் பரிசு இல. 631<br>3 ஆம் பரிசு இல. 2330 | ஆறுதல் பரிசுகள் இல.<br>1129, 2026, 1062, 2808, 865, 456, 455, 730, 160, 739. |

பரிசுக்குரியவர்கள் தங்கள் பரிசில்களை 15.08.2004 இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும். - நிர்வாகத்தினர்.

(3487)(42-14-18-26)


## மரண அறிவித்தல்கள்

### தம்பு பொன்னையா



(பொன்னர்)

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட தம்பு பொன்னையா 31.07.2004 சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூமணியின் அன்புக கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கம் ஆகியோரின் மூத்த மகனும் நாகர் - முத்து தம்பதிகளின் மூத்த மருமகனும் அமிர்தலிங்கம் (தொலைத்தொடர்பு உத்தியோகத்தர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), சிறிகணேசலிங்கம் (இந்தியா), அமிர்தாஞ்சலி (பிரான்ஸ்), கீதாஞ்சலி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசு, தர்மலிங்கம், தம்பித்துரை (பிரான்ஸ), காலஞ்சென்ற அழகம்மா மற்றும் இராசமணி, இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கோவிந்து, கதிரேசு (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்) மற்றும் தர்மலிங்கம் (வவுனியா), தவமணி, பூங்கிளி, பரமேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் கருணேந்திரன் (பிரான்ஸ்), தனேஸ்வரி (யாழ்ப்பாணம்), சரோஜினிதேவி (இந்தியா), விமலபட்சலா, சற்சொருபவதி ஆகியோரின் மாமனாரும் அமிர்தனா, அமிர்தினி, அமிர்தராஜ், ரஜீந்தினி, ராஜ்கபீன், நிஷாந்தினி, ஊசாந்தினி ஆகியோரின் அருமைப் பேரனும சிவலிங்கம், A.V.மாணிக்கம் (ஓய்வுபெற்ற பத்திரிகை ஆசிரியர், ஈழநாடு), காலஞ்சென்ற மகேந்திரம் (மகேந்திரா பெயின்ரிங் வேக்ஸ்) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-08-2004) புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும். அதேவேளை, இல.27/36, புங்கன்குளம் வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் அன்னாரின் பிரிவுத்துயர் பகிர்வு நிகழ்வு இடம்பெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.தர்மலிங்கம்
*(மைத்துனர்).*

பொ. அமிர்தலிங்கம் (கார்),
இல. 27/36, புங்கன்குளம் வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(34559) (26-14-18)

திருமதி

### பொன்னையா முத்தாச்சி



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் பரந்தனை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது வடலியடைப்பு, பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா முத்தாச்சி அவர்கள் 03.08.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர் பொன்னையாவின் அன்பு மனைவியும் வேலும்மயிலும, தவமணிதேவி, பத்மாவதி, இராசரத்தினம், பரமேஸ்வரி, பாலகிருஷ்ணன், பரலோகராணி, இராமகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மற்றும் நித்தியதயாநிதி, சிவயோகம், சேனாதிராசா, வாணி, திருஞானசம்பந்தமூர்த்தி, ஜெயகௌரி, நாகராசா, ரஞ்சிதமலர் ஆகியோரின் மாமியாரும் கிருபானந்தன், சதானந்தன், முரளீதரன், கிருஸ்ணமேனன், சசிகுமார், சசிகலா, ஜெயக்குமார், பத்மராஜா, கோமதி, சங்கீதா, ஜெவாணி, பவித், தாரணி, கௌதமன், குருகாந்த், சோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2004) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வடலியடைப்பு பிரதான வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வளாவோடை இந்துமயானத்தில் தகனஞ்செயயப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினா, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.இராமகிருஷ்ணன்
(மகன் - மூர்த்தி).

*ந.நாகராசா,*
*தாரணி வெல்டிங் வேக்ஸ்,*
*பிரதான வீதி,*
*வடலியடைப்பு.*

(34869) (24-14-18-26)


# நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு - வடக்கு - கிழக்கில் பாலங்களைப் புனர்நிர்மாணம் செய்தல்

# கேள்விப்பத்திர அழைப்பு

**ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து கிடைக்கும் பாலம்கட்டுவதற்கான உருக்குப் பொருள்களைக் கொண்டு வடக்கு - கிழக்கில் பாலங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கான கடன் ஒன்று இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசுக்குக் கிடைத்துள்ளது. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் வடக்கு - கிழக்கு பாலங்களைப் புனர்நிர்மாணம் செய்யும் திட்ட கேள்விப்பத்திரச் சபையின் தலைவரால் 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி 15.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

அநுராதபுரம் மாவட்டம்

| பொதி | பாலத்தின் பெயரும் வீதியும் | இனம் காணல் இல. | வீதி இல. | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | கேள்விப் பாதுகாப்புத் தொகை (ரூபா) | ICTAD தரம் |
|---|---|---|---|---|---|---|
| P/07 | புத்தளம் - திருகோணமலை வீதி | 2.01.12 | A12 | | | |
| | வவுனியா ஹொரவபொத்தான | 2.01.15 | A29 | 1500/= | 180,000/= | M4 |
| | வவுனியா ஹொரவபொத்தான | 2.01.16 | A29 | | | |
| | கிளிநொச்சி மாவட்டம் | | | | | |
| P/08 | டிப்போ சந்தி இரத்தினபுரம் | 1.02.48 | | 500/= | 100,000/= | M5 |
| P/09 | பரந்தன் முல்லைத்தீவு வீதி | 1.02.23 | A35 | 1500/= | 160,000/= | M4 |
| | பரந்தன் முல்லைத்தீவு வீதி | 1.02.24 | A35 | | | |
| | வட்டக்கச்சி | 1.02.49 | | | | |
| | யாழ்ப்பாண மாவட்டம் | | | | | |
| P/10 | யாழ்ப்பாணம்- பொன்னாலை பருத்தித்துறை வீதி (தொண்டமானாறு) | 1.01.08 | A32 | 500/= | 200,000/= | M3 |

**கேள்விப்பத்திரங்களை, *"திட்ட அதிகாரி, 3 ஆவது மாடி, 177 காலி வீதி, கொழும்பு 03"* அல்லது *மாகாணப் பணிப்பாளர் RDA, காரியாலயம், வவுனியா* அவர்களிடம் 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதிவரை சாதாரண வேலை நாள்களில் 09.30 மணிக்கும் 16.00 மணிக்கும் இடையில் பெற்றுக்கொள்ளலாம்.**

**கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கட்டணமின்றி மேற்கண்ட காரியாலயத்தில் விரும்பினால் அவைகளைப் பார்வையிடலாம். வெவ்வேறு மாவட்டங்களிலும் பாலங்கள் இருக்குமிடங்களைச் சென்று பார்வையிடுவதற்கான திகதிகள் கேள்விப் பத்திரதாரர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.**

**அட்டவணையில் காணப்படும் தரங்களையுடைய மற்றும் செல்லுபடியாகக்கூடிய NCASL உறுப்புரிமையுள்ள கேள்வியாளர்கள் தமது தொழில்துறை முகவரியுடனான கடிதத்தில் எழுத்துமூலமாகக் கோரும்பட்சத்தில் மட்டுமே கேள்விபத்திரங்கள் வழங்கப்படும.**

**கேள்விகள் திறக்கப்பட்டதன் பின்னர் 90 நாள்களுக்கு அவை செல்லுபடியாகும். அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளபடியான பிணைத் தொகைகள் (Bid Bonds), நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சுச் செயலாளரினால் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இணைக்கப்பட்டிருக்கவேண்டும். கேள்விகள் திறக்கப்பட்டு 120 நாள்கள் வரை அவை செல்லுபடியாகும். கேள்விப் பிணைகள் (Bid Bonds பிரபலமான வங்கி, காப்புறுதி ஸ்தாபனம் அல்லது கட்டுமான உத்தரவாத நிதியம் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டவையாய் இருத்தல்வேண்டும்.**

**ஒப்பந்தப்பத்திரங்களில் காட்டப்பட்டுள்ளபடி தேவையான அளவு நிதிவசதி மற்றும் தொழில்நுட்பத் தகுதிகள் பாலம் அமைக்கும் வகையில் தமக்கு உண்டு என்பதை நிரூபிக்கும் ஆவணங்களையும் கேள்விகளுடன் இணைக்கும்படி கேள்விப் பத்திரதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

**வடக்கு - கிழக்கில் பாலங்கள் புனர்நிர்மாணம் செய்யப்படும் திட்டத்தின்கீழ் எந்த ஓர் ஒப்பந்தகாரருக்கும் எந்த ஒரு சமயத்திலும் அதிக பட்சமாக (3) மூன்று பொதிகள் (Packages) மட்டுமே வழங்கப்படும்.**

Maybey & Johnson U.K., **நிறுவனத்தின் உள்ளூர் முகவர்கள் அல்லது உப ஒப்பந்தகாரர்கள் இந்தக் கேள்வியில் பங்கேற்கத் தகுதியற்றவர்களாவர்.**

**இரட்டைப் பிரதிகள் கொண்ட முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள், இடதுபக்க மூலையில் திட்டத்தின் தலைப்பைக் குறிப்பிட்டு, பதிவுத்தபாலில் அல்லது நேரடியாகத் *'தலைவர் கேள்விப்பத்திரசபை, வடக்கு - கிழக்கு பாலங்கள் புனர்நிர்மாணத்திட்டம், 3 ஆவது மாடி, 177, காலி வீதி, கொழும்பு-03'*** (The Chairman, Tender Board, Rehabilitation of Bridges, N.E. Project, 3rd Floor 177, Galle Road, Colombo - 03) **என்ற முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.**

**கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் பிரசனனமாய் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விநேரம் முடிவுற்றவுடனே கேள்விப் பத்திரசபைத் தலைவரின் காரியாலயத்தில் அவை திறக்கப்படும்.**

**தலைவர், திட்ட கேள்விப்பத்திரசபை,**
**பாலங்கள் புனர்நிர்மாணம், வடக்கு - கிழக்குத்திட்டம்,**
**நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு,**
**3 ஆவது மாடி, 177 காலிவீதி, கொழும்பு 03.**

(சி-36401) (14-15-18-26)

# பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கிக் கொண்டுள்ளது

## முன்னாள் அமைச்சர் திசாநாயக்கா விவரிக்கிறார்

கொழும்பு,ஓக.4

சமாதான முயற்சிகள் தொடர்பான அரசின் செயற்பாட்டில், சர்வதேச சமூகம் நம்பிக்கை இழந்துவிட்டது. வெளிநாட்டு உதவிகள் முடக்கப்பட்டுவிட்டன. இதனால், பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கிவிட்டது.

இப்படிக் கூறுகிறார் முன்னாள் அமைச்சரும், எம்.பியுமான எஸ்.பி.திசநாயக்க. எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோது, அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் முக்கிய விடயமாகக் கருதப்படும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் இந்த அரசு கவனம் செலுத்துவதாகத் தென்படவில்லை. அது வெறுமனே காலத்தைக் கடத்தி வருகிறது. நாட்டின் அபிவிருத்திக்காகக் கிடைக்கவிருந்த 45 ஆயிரம் கோடி ரூபா கைநழுவிப் போய்விட்டது. நாளுக்குநாள் வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரித்துக் கொண்டிருக்கிறது. சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் புஸ்வாணமாகிவிட்டன. நெல் மானியம் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. சீரான நீர்விநியோகம் இல்லாத காரணத்தால் சிறுபோகத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அரை ஏக்கர் காணிகளில் மட்டுமே விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெல் உற்பத்தி விலை கிலோ ஒன்றுக்கு 16 ரூபா 50 சதமாகியுள்ளது.

ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் சிறுபோகத்தில் ஈடுபட்ட விவசாயிகள் இரண்டு ஏக்கரில் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இன்று, அரசியல் ரீதியான முன்னெடுப்பும் இல்லை. பொருளாதார ரீதியான முன்னேற்றமும் இல்லை.

வெறுமனே காலம் கடத்தும் கபடத்தனமான ஒரு நிலையை அரசு கையாண்டு வருகிறது.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்ற நாம் சமஷ்டி முறையிலான ஒரு தீர்வை நோக்கிச் சென்றோம். விடுதலைப் புலிகளும் அதற்குச் சம்மதித்தனர். அதன் பின்னர் இடைக்காலத் தீர்வாகத் தன்னாட்சி அதிகாரசபையை முன்வைத்தனர்.

அதனை அடிப்படையாகக் கொண்டு நாம் பேச்சுக்களை முன்னெடுக்கத் தீர்மானித்தோம். இதே தீர்மானத்தை ஜனாதிபதியும் கொண்டிருந்தார்.

ஆனால், இன்று ஒரு முரண்பாடான நிலையில் அரசு செயற்பட்டு வருகிறது.

எமது கட்சி ஆட்சியில் இருந்தபோது என்ன காரணத்தைக் கூறி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றாரோ அந்தக் காரணங்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதா என்று நாம் அரசைக் கேட்கிறோம். குரங்குபாஞ்சான் முகாம் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் கொலைகளே அமைச்சுக்களைப் பறிப்பதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

ஆனால், இன்று நிலைமை என்ன? குரங்குபாஞ்சான் முகாம் அகற்றப்பட்டதா? அல்லது இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கொல்லப்படாமல் இருக்கின்றனரா?

எனவே வீண் பழிகளை எம்மீது சுமத்தி நாம் முன்னெடுத்த சமாதான முயற்சிகளுக்கு ஆப்பு வைத்தனர். இன்று நாட்டை ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளனர் என்றார் அவர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.கவின் பேச்சாளர் ரவீந்திர ரந்தெனிய, ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க போன்றோரும் கருத்து வெளியிட்டனர்.

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.4

நீர்வேலி சி.சி. த.க. பாடசாலையின் 125ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும 7ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் அதிபர் செ.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆழ்ரீஸ்கந்தமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கலந்துகொள்ளவுள்ளனர். (10-13)

# தொழிற்சங்கத் தலைவர்கள் ஐவர் கினிகத்தேனவில் கைது; அதனால் பதற்றம்

கொழும்பு,ஓக.3

தொழிற் சங்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து ஆயிரத்துக்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் முதல் திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். இதனால் பெரும் பதற்றம் நிலவுகின்றது.

கினிகத்தேன பொலீஸ் பிரிவுக்குட்பட்ட கெனில்வோர்த் தோட்டத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வழமையாக அங்கு தொழிலாளர்கள் தினசரி 18 கிலோ கொழுந்து பறிக்கவேண்டும். ஆனால், தோட்டத்திற்குப் புதிதாக வந்த தோட்ட அதிகாரி தினசரி 20கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் எனப் பலவந்தப்படுத்தியுள்ளார். ஆனால், வழமைக்கு மாறாக இதனைச் செய்ய முடியாது எனத் தொழிலாளர்கள் மறுத்துவிட்டனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை தோட்டத்திற்கு வந்த கினிகத்தேன பொலீஸார் இரண்டு பெண்கள் உட்பட ஐந்து தொழிற்சங்கத் தலைவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் தோட்டத்தில் இனக்கலவரம் ஒன்றை உருவாக்க முனைகின்றனர் எனத் தெரிவித்து ஹற்றன் நீதிவான் முன்னிலையில் அவர்களை ஆஜர்படுத்தினர் பொலீஸார். இவர்கள் அனைவரையும் ஓகஸ்ட் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி ஹற்றன் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த அடாவடித்தனத்தை ஆட்சேபித்தே எல்லாத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர் என இ.தே.தோ.தொ. சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் எம்.எஸ்.ஏ.ஏச். முஹைதீன் தெரிவித்தார். (க)

**கட்டட உரிமையாளர் வழக்கில்**

# நீதிமன்ற அழைப்பாணையைத் தேவானந்தா தவிர்த்து வருகிறார்

## நீதிமன்றில் அதிகாரிகள் அறிவிப்பு

கொழும்பு,ஓக.4

இந்துசமய விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீதிமன்ற அழைப்பாணையைத் தவிர்த்துவருகிறார் என்று கொழும்பு பிஸ்கால் அதிகாரிகள், மாவட்ட நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

கொழும்பு, காலி வீதியிலுள்ள 64ஆம் இலக்க முகவரியில் அவரைக் காணமுடியவில்லை என்று பிஸ்கால் அதிகாரிகள் நீதிமன்றில் அறிவித்ததையடுத்து அந்தக் கட்டடத்தின் கதவின் மீது அழைப்பாணையை ஒட்டி விடும்படி மேலதிக நீதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

மூன்று வழக்காளிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்றில் காலி வீதியில் தேவானந்தாவின் அமைச்சு அமைந்துள்ள கட்டடத்திற்குள் அவர் நுழைவதையும் கட்டடத்தின் பல மாடிகளின் உரித்துரிமைகளில் தலையிடுவதையும் தடைசெய்து நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

கொழும்பு றொட்டன்டா கார்டனைச் சேர்ந்த செனகலத்தா அபேசேகர, சுலக்க அபேசேகர மற்றும் நடீக்கா அபேசேகர ஆகிய மூன்று பேரின் சார்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து மேலதிக நீதிபதி ஆர்.எம்.சிஸிரகே. ரட்ணாயக்க மேற்படி கட்டளையை விடுத்தார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள குறிப்பிட்ட கட்டடத்தை அதன் ஒன்பது மாடிகளுடன் ஒருவருட குத்தகைக்கு கைத்தொழில் முதலீட்டு மேம்பாடுகள் மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சுக்கு தாங்கள் கொடுத்திருந்ததாகவும் ஆனால் குத்தகை ஒப்பந்தத்துக்கு மாறாக மூன்று மாடிகள் விவசாயம், இந்து சமய விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் வழக்காளிகள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

தேவானந்தா மீது அண்மையில் தற்கொலைக் குண்டுதாரியின் அச்சுறுத்தல் இடம்பெற்றதையடுத்துத் தமது கட்டடத்துக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று அஞ்சுவதாகவும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் உல்லாசப் பயணத்துறை அமைச்சு அங்கிருந்து வெளியேறாதிருப்பதாகத் தங்களுக்கு நம்பகமான தகவல் கிடைத்திருப்பதுடன் அவ்வாறு வெளியேறியவுடன் அங்கு பலாத்காரமாகவும் சட்டவிரோதமாகவும் பிரவேசித்து ஆக்கிரமித்துக்கொள்ள டக்ளஸ் தேவானந்தா திட்டமிட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறிப்பிட்ட கட்டடத்துக்கள் தேவானந்தா பிரவேசிப்பதையும் தமது உரித்துரிமையில் தலையிடுவதையும் தடைசெய்வதுடன கட்டடத்தின் உரிமை தொடர்பாகப் பிரகடனம் ஒன்றை விடுக்கும்படியும் அவர்கள் கோரியுள்ளனர்.

இதையடுத்து ஓகஸ்ட் மாதம் 03ஆம் திகதிவரை கட்டடத்தின் குறிப்பிட்ட மாதகாலத்துக்குள் தேவானந்தா பிரவேசிப்பதைத் தடைசெய்து மேலதிக நீதிபதி கட்டளை பிறப்பித்தார்; இதுதொடர்பான அழைப்பாணையையும் விடுத்தார். (ப)

# மறைந்த ஆயர் நினைவாக நினைவுமலர் வெளியீடு

மறைந்த முன்னாள் யாழ்.ஆயர் அதி.வண.தியோகுப்பிள்ளை ஆண்டகையின் முதலாவது ஆண்டு நிறைவு நினைவாக நினைவு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்.மறைக்கல்வி நிலையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு வெளியீட்டு வைபவம் நடைபெற்றது.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜே.நீக்கிலாஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதிவண. எஸ்.ஜெபநேசன், யாழ். திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.ம.மரியசேவியர் அடிகளார், யாழ். ஆயர் அதி.வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, அருட்சகோதரி அருள் பிரான்சிஸ் பெர்னாண்டோ ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

யாழ். அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நூலை வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியை தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதி.வண.ஜெபநேசன் பெற்றுக்கொண்டார். (ஐ-51)

## கல்விச்சாலைக் காட்சிகள்



தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களது ஆக்கப் பொருள் கண்காட்சி அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கண்காட்சியில் வைக்கப்பட்ட பொருள்களை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, கல்லூரி அதிபர் அ.கயிலாசபிள்ளை, உபஅதிபர் எஸ்.பத்மகாந்தன், கல்வித் திணைக்கள நிர்வாக அலுவலர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)*



அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் வெற்றி பெற்ற இல்ல மாணவர் தலைவருக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:வடமராட்சி செய்தியாளர்)*



யாழ்.பாலர் கல்விக்கழகத்தின் கீழ் இயங்கும் அரசடி ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். இந்து ஆரம்ப பாடசாலை உப அதிபர் எஸ்.தியாகலிங்கம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். பாடசாலை ஆசிரியை திருமதி ஞானகாந்தனும் படத்தில் காணப்படுகின்றார்.




பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சபா.ஜெயராஜா, திருமதி பானுமதி சபா ஜெயராஜா, சிறப்புவிருந்தினர்களான கோட்டக்கல்வி அலுவலர் எஸ்.எஸ்.தங்கராஜா, பங்குத்தந்தை அருட்திரு. எஸ்.யேசுரட்ணம் அடிகளார் மற்றும் அதிபர் திருமதி எம்.ஸி. செல்வநாயகம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

# யாழ்.கல்விவலய மட்டத்திலான தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.கல்வி வலய மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி போட்டியில் பங்குபற்றி மாவட்ட, மாகாண மட்ட போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களது பெயர், விவரம் வருமாறு:-

**பிரிவு I :-** இ.கஜானன் (வாசிப்பு - புனித ஜோன் பொஸ்கோ), கா.சௌஜா (ஆக்கத்திறன் வெளிப்பாடு - கொக்குவில் இந்து ஆரம்பப பாடசாலை), சி.பிரணவன் (ஆக்கம் - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), ச.திலக்சன் (பேச்சு - யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), டோ.சு.ஜெரின்சியா (பாவோதல் - புனித ஜோன் பொஸ்கோ), வ.ஸ்ரீதரா (இசைவும் அசைவும் - யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை), தெ.சரவண்யா (தனி நடனம் - இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

**பிரிவு II:-** ஶ்ரீ.மேனகா (வாசிப்பு - இந்து மகளிர் கல்லூரி), ய.நிருத்திகா (கட்டுரை வரைதல் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), இ.லக்சிகா (பேச்சு - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), தெ.வாசுகி (பாவோதல் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்), இ.அர்ஜுன் (தனி இசை - இந்துக்கல்லூரி), இ.பிரவீணா (தனி நடனம் - யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**பிரிவு III:-** பா.யசிந்தா (கட்டுரை வரைதல்- வேம்படி மகளிர் கல்லூரி), ப.உபேந்திரா (பேச்சு - யாழ்மத்திய கல்லூரி), இ.வினோஜா (பாவோதல் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்), லோ.தனப்பிரியா (இசை - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கு.துவாரகா (தனி நடனம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

**பிரிவு IV:-** க.கஜனி (கட்டுரை வரைதல் - கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்), சா.நிசாந்தன் (இலக்கணப்போட்டி - யாழ். இந்துக் கல்லூரி), சௌ.கபிலா (குறுநாடக ஆக்கம் - கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், சு.அனுசானி (கவிதையாக்கம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ப.அரிராம் (சிறுகதை ஆக்கம் - யாழ் இந்துக்கல்லூரி), க.கலையரசி (பேச்சு - அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி), மே.லதாங்கி (பாவோதல்- வேம்படி மகளிர் கல்லூரி), சி.வஜ்ஜி (தனி இசை - கொக்குவில் இந்துக்கல்லூரி), பா.அனுஷன் (தனி நடனம் - பெரியபுலம் மகா வித்தியாலயம்).

**பிரிவு V:-** ப.கஜேந்தினி (கட்டுரை வரைதல்- கொக்குவில் இந்துக்கல்லூரி), த.உஷா (இலக்கணப்போட்டி ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), எ.சுகிந்தன் (திறனாய்வுப் போட்டி - சென்ஜோன்ஸ் கல்லூரி), நி.கரன் (குறுநாடகம் - சென்ஜோன்ஸ் கல்லூரி), ஞா.ஆதவன் (கவிதை- சென்ஜோன்ஸ் கல்லூரி), வ.துயிலன் (சிறுகதை - யாழ்.மத்தியகல்லூரி), தெ.ஹர்சன் (பேச்சு - யாழ்.மத்திய கல்லூரி) இ.சசீவன் (பாவோதல் - சென்ஜோன்ஸ் கல்லூரி), பொ.சுதாஜினி (தனி இசை - வேம்படி மகளிர் கல்லூரி), கு.காயத்திரி (தனி நடனம் - வேம்படி மகளிர் கல்லூரி).

திறந்த போட்டிகளில் தெரிவான பாடசாலைகளின் விவரம்வருமாறு:-

பிரிவுI:- குழு இசை - வேம்படி மகளிர் கலலூரி, குழு நடனம் - கொக்குவில் இந்துக் கல்லூரி,

**பிரிவு II:-** குழு இசை - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, குழு நாட்டிய நாடகம் - யாழ். இந்து மகளிர் கல்லூரி.

வில்லுப்பாட்டு - யாழ்.இந்துக்கல்லூரி, விவாதம் - சென் ஜோன்ஸ் கல்லூரி, தமிழறிவு வினாவிடை- புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, தென்மோடி - சென் பற்றிக்ஸ் கல்லூரி, இசை நடனம்- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, சிந்து நடை - யாழ். இந்து மகளிர் கல்லூரி.(எ-6)

## ஆண்டு விழா நிகழ்வு

சாவகச்சேரி,ஓக3

இலங்கை வங்கியின் 65ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய நிகழ்வு நேற்று முன்தினம் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் இடம்பெற்றது.

சாவகச்சேரிக் கிளையின் முகாமையாளர் ந.இராஜகோபால் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கை சிவஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள், சாவகச்சேரி வணிகர் கழகத் தலைவர் டாக்டர் சி.அருளானந்தம், வர்த்தகர் ந.சிவபாலன் ஆகியோர் ஏற்றினர்.

நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் நிகழ்த்தினார். (ஓ-31-117)


கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## பதவி வெற்றிடம்

1, பதவி:- சாரதி - குறியீட்டு இல. 312/13
சம்பள அளவுத்திட்டம்: 4000-75x10 - 80x10 - 5550 (கூ.வே.ஆ.சுற்.நிரு. 31/99 இன்படி)
தகைமைகள்:- 5 ஆம் வகுப்புச் சித்தியுடன், பெட்டியுடன் உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரமும், [illegible]டு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.
வயது:- 18 தொடக்க[illegible] வரை.

2, பதவி:- களஞ்சிய முகாமையாளர் -கு[illegible] 208/14 (கிளை முகாமையாளர்)
சம்பள அளவுத் திட்டம்:- 3750-70x10 - 75x10 - 5200 (கூ.வே.ஆ.சுற். 31/99 இன்படி)
தகைமைகள்:- கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது 16 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப்பணியாளர் - (சாதாரணதரம்) தராதரப் பத்திரம் / க.பொ.த. (சாதாரண தரம்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தககணிதம்/கணிதம், தமிழ்மொழி உள்ளடங்கிய ஆறு பாடங்களில் சித்தி.
வயது:- 18 தொடக்கம் 45 வரை.

3, பதவி:- தட்டெழுத்தாளர் - குறியீட்டு இல. 305/15
சம்பள அளவுத் திட்டம்:- 3500-65x10 - 70x10 - 4850 (கூ.வே.ஆ.சுற். 31/99 இன்படி)
தகைமைகள்:- க.பொ.த. (சாதாரணம்) தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியும் தமிழ் மொழியில் தட்டெழுத்தாற்றல் நிமிடம் ஒன்றிற்கு 20 சொற்களும்.
வயது:- 18 தொடக்கம் 45 வரை

விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10/= செலுத்திப் பெறுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும். வேறு கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களது சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.

அங்கத்தவர்களுக்கும், சங்கப் பணியாளர்களுக்கும் வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் *'பொதுமுகாமையாளர், கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்'* என்ற முகவரிக்கு 15.08.2004இற்கு முன்பாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறித்து '.............. பதவிக்கான விண்ணப்பம்' என எழுதப்படல் வேண்டும்.

பருத்தித்துறை வீதி, கோப்பாய். (34841) (38-13-14) - பொது முகாமையாளர்.



## பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில் பணிபுரிய விரும்புவோர் தன் வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.08.05 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகைதருமாறு வேண்டுகிறோம்.

**பணிநிலை:**
(1) வரி அறவீட்டாளர்.

**தகைமைகள்:**
01) தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02) அகவை 18-35 வரை இருத்தல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்:**
நாள்: 2004.08.05
நேரம்: காலை 10.00 மணி
இடம்: 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்

★ குறிப்பு:
1) கல்விச் சான்று 3) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
2) தே.அ.அட்டை 4) மேலதிக தகைமைச் சான்றுகள்

(34835)(34-12-14-38)

ஆளுகை, சந்தைப்பகுதி, யாழ். மாவட்டம்



"ரோயல்" இண்டஸ்ரீஸின் சிறந்த தயாரிப்பு
சுத்தமான ரோயல் ஒலிவ் ஒயில்
வாங்கிவிட்டீர்களா?
★ உங்கள் சருமத்தை மினு மினுப்பாக்கி மேனியைக் கவர்ச்சியுடையதாக மாற்றுகின்றது.
தோலில் வரும் வியாதிகளுக்கு சிறந்த ஔஷதம்
PRODUCT OF SPAIN
ROYAL 100% சுத்தமான ஒலிவ் ஒயில் OLIVE OIL
PACKED BY : ROYAL Industries Colombo - 12
☎ : 0112334603
(36309)




சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567



## 24ஸ்ரீ 5123 இலக்க பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை 10.08.2004

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான 24 ஸ்ரீ 5123 இல. (911 பென்ஸ்) பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. பாரவூர்தியை 04.08.2004 தொடக்கம் 10.08.2004 வரை கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் பாரவூர்தி தரிப்பிடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். 10.08.2004 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

01. மீளளிக்கும் பணமாக ரூபா 1000/ செலுத்தியே கேள்வியில் பங்குபற்றலாம்.
02. தெரிவுசெய்யப்படுபவர் மூன்று நாள்களுக்குள் முழுப்பணத்தினையும் செலுத்திப் பாரவூர்தியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி, தாளையடி.
கூட்டுறவுச் சேவையிலுள்ள பொ.ஸ்ரீ இராமச்சந்திரன் பொதுமுகாமையாளர்.
(C-36682) (38-12-14)



Dialog GSM kit
டயலொக் கையடக்கத் தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
எந்நேரமும் உன்னுடன்..

WESTERN UNION வெஸ்டன் யூனியன் | MONEY TRANSFER பணப் பரிமாற்றல்
மூலம்
ஒரு சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைத்திட எம்மை நாடுங்கள்:

பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற சகல விதமான

SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட

ஸ்ரீ முருகன் SRI MURUGAN 303,K.K.S.Road Jaffna. ☎ 021 222 5393 Fax : 222 3435
தொலைத் தொடர்பகமும் முகவர் தபாலகமும் Tele Communication & Agency Post Office. E.mail del-smskr@eureka.lk

# பள்ளிக்குடாக் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய இழுவைப் படகுகளால் வலைகள் நாசம்

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் குற்றச்சாட்டு

பூநகரி,ஓக.4

பள்ளிக்குடாக் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் அப்பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களைச் சேதப்படுத்திவருவதாகப் பள்ளிக்குடா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

இதனால், தமக்கு பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

தினமும் பள்ளிக்குடாக் கடற்பரப்பினுள் நுழையும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் எமது மீனவர்களின் சிறகுவலை, தங்கூசிவலை, நண்டுவலை ஆகியவற்றை முற்றாகச் சேதப்படுத்தி அழித்து விடுகின்றன. இதனால், இச்சிறுதொழில்களைச் செய்வோர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மனக்கவலையும் அடைகின்றனர். இழுவைப்படகுகளில் வரும் இந்திய மீனவர்கள் எமது கடற்றொழிலாளர்களைக் கடுமையாக அச்சுறுத்தியும் வருகின்றனர். இதனால் எமது மீனவர்கள் சுதந்திரமாக




மீன்பிடித் தொழிலில் ஈடுபடமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், குருநகர்ப் பகுதியில் இருந்துவரும இழுவைப்படகுகளும் எமது மீனவர்களின் வலைகளைச் சேதமாக்கி வருகின்றன. இது கடந்த ஒருவார காலமாக அதிகரித்துள்ளது என்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் தெரிவித்துள்ளது.

ஆகவே, உரியவர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனஞ்செலுத்தி எமது மீனவர்களின் தொழிற் சுதந்திரத்தை உறுதிப் படுத்துமாறு அது கேட்டுள்ளது. (8-403)

## விவசாயிகளுடன் நிதித்துறையினர் சந்திப்பு

பரந்தன்,ஓக.4

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழீழ நிதித்துறையினருடனான சந்திப்பு ஒன்று கடந்தமாதம் 24ஆம் திகதி நடைபெற்றது.

இச்சந்திப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப்பொறுப்பாளர் மதன் ராஜ், நிதித்துணைப்பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கால்நடை உற்பத்தி செய்வதில் ஏற்படும் பிரச்சினைகள், கால்நடைகளை விற்பனை செய்வதில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (8-352)



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கடந்த மாதம் 26ஆம் திகதி தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சிவசொரூபநாதபிள்ளை கருத்துரை வழங்குவதையும் அருகில் நிர்வாக உத்தியோகத்தர் இ.பத்மநாதன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்; பரந்தன் செய்தியாளர்)

### கிளிநொச்சிப் பாடசாலைகளின்

## சிறுவர் நலத்திட்டம் தொடர்பான நாடகப் போட்டி முடிவுகள்

வட்டக்கச்சி,ஓக.4

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் 'யுனிசெவ்' நிறுவனமும் இணைந்து கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்திய சிறுவர் நலத்திட்ட நாடகப் போட்டியில் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு ஆகியவற்றின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவை வருமாறு:-

**கீழ்ப்பிரிவு:**

முதலாம் இடம்: பிரமந்தனாறு ம.வி., 2ஆம் இடம்: வட்டக்கச்சி ம.வி., 3ஆம் இடம்: இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடாசலை

**மத்தியபிரிவு:**

முதலாம் இடம்: பாரதி வித்தியாலயம், 2ஆம் இடம்: வட்டக்கச்சி ம.வி., 3ஆம் இடம்: பரந்தன் இந்து ம.வி.

மேல்பிரிவின் போட்டிகள் இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் முதலாம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே 10 ஆயிரம் ரூபா, 7ஆயிரம் ரூபா, 5ஆயிரம் ரூபா பணப்பரிசுகள் வழங்கப்படவுள்ளன. (8-405)

## ஆடுகள் இறக்கின்றன

ஒட்டுசுட்டான்,ஓக.4

'சேவாலங்கா' நிறுவனத்தால் நெடுங்கேணி பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்ட ஆடுகள் பலவும் இறந்துபோவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வழங்கப்பட்ட ஆடுகள் இப்பிரதேசக் காலநிலை ஒத்துக்கொள்ளாமையினாலேயே இறப்பதாகக் கூறப்பட்டது.

ஆடுகளுக்கான நோய்த் தடுப்பூசிகள் வழங்கப்படும் எனக் கூறியும் அவை இதுவரை வழங்கப்படவில்லை எனவும் ஆடுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் தெரிவித்தனர். (8-341)

## கல்விவலயங்கள் ஊடாகவே போக்குவரத்துக் கொடுப்பனவு

வட்டக்கச்சி,ஓக.4

இந்த ஆண்டு நடைபெற்று முடிந்த வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி மற்றும் நடைபெறவுள்ள தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப்போட்டி ஆகியவற்றில் பங்குகொள்ளும் பாடசாலைகளுக்கான போக்குவரத்துக் கொடுபனவு அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளுக்கு ஊடாகவே வழங்கப்படல் வேண்டும் என மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு போட்டியும் முடிவடைந்து இரு வாரங்களுக்குள் தேவையான போக்குவரத்துக் கொடுப்பனவுத் தொகையினைக் கோருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இக்கொடுப்பனவு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கொடுப்பனவு நியமத்திற்கு அமைய வழங்கப்படும்.

கடந்த வருடம் இக்கொடுப்பனவு மாகாணக கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது.

இதன்போது சில பாடசாலைகளுக்கான கொடுப்பனவு கிடைக்கப்பெறவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-405)

## பூநகரிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

பூநகரி,ஓக.4

பூநகரிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் கடந்த மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜெயபுரம் ஆயுர்வேத வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

இதில் தேசியக் கொடியினை ஜெயபுரம் வலயப் பொறுப்பாளர் கதிரொளி ஏற்றிவைத்தார். சனசமூக நிலையத்தைக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் திறந்து வைத்தார். சனசமூக நிலையப் பெயர்ப்பலகையைக் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.தனபாலசிங்கம் திரை நீக்கம் செய்துவைத்தார்.

மேற்படி நிகழ்வில் அரச அதிபர், பிரதேச செயலர், சுகாதார வைத்திய அதிகாரி, அரசியல் துறைப் பொறுப்பாளர், கரைச்சிப் பிரதேச செயலர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர்களும் சிறப்புரைகளை நிகழ்த்தினார்கள்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசில்களும், குழந்தைகளுக்கான பால்மாவும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டன. (8-403)

## திலீபன் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு

மாங்குளம்,ஓக.4

மாங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் மருத்துவமனைக்கு ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் இருதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மனமோகன், நோயாளர் காவுவண்டி (அம்புலன்ஸ்) ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

தியாகதீபம் திலீபன் மருத்துவமனை அபிவிருத்திக் குழுத்தலைவர் சி.கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்தக் காவுவண்டி கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றிவைத்தார். தியாகதீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை வைத்திய கலாநிதி மனமோகனின் துணைவியார் வைத்திய கலாநிதி கௌரி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். (4-6)

## இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் குறைந்து வருகிறது

### சிறுபோகச் செய்கை அழியும் அபாயம்

வட்டக்கச்சி,ஓக.4

மழை பெய்யாததால் இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்திருக்கின்றது.

இதனால் இராமநாதபுரத்தில் - இரணைமடு வலதுகரை வாய்க்கால் நீர்ப்பாசனப் பகுதி வயல்களில் உள்ள சிறுபோக நெற்பயிர்கள் தண்ணீர் இன்றி எரிந்துபோகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நெல் வயல்களிலிருந்து பூரண விளைச்சலைப் பெறவேண்டுமானால் குறைந்தது ஒரு மாத காலப்பகுதிக்காவது நீர் தேவையாக உள்ளது.

ஆனால், இரணைமடுக் குளத்தில் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் இந்த வயலகளுக்கான நீர் விநியோகம் தடைப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

குளத்தினுள் இருந்து வலதுகரைத் துருசுக்கு நீர் செல்லும் வாய்க்கால்களில் காணப்படும் மண்திட்டுக்களை அகற்றி ஓரளவுக்காவது வயல்களுக்கு நீர்கிடைக்க உதவுமாறு விவசாயிகள் கேட்டிருக்கின்றனர்.

இவ்விடயத்தில் தொடர்புடைய அமைப்புகள் கூடிய கவனமெடுத்து நெல்வயல்களை அழிவிலிருந்து ஓரளவேனும் பாதுகாக்கவேண்டும் என்றும் - கேட்கப்பட்டிருக்கிறது.(4-405-203)

## நெடுங்கேணிக்கு நிரந்தர கால்நடை வைத்தியர் இல்லை

ஒட்டுசுட்டான்,ஓக.4

வவுனியா மாவட்டம், நெடுங்கேணிப் பிரதேசத்திற்கு நிரந்தர கால்நடை வைத்தியர் இன்மையால் கால்நடைகளுக்குரிய தடுப்பு மருந்துகள் ஏற்றமுடியாமல் அவை நோயினால் இறந்து வருவதாக அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

வேறு பிரதேசத்தில் வசிக்கும் கால்நடை வைத்தியர்கள் இப்பிரதேசத்துக்கான சேவைகளை வழங்கமுடியாதுள்ளது எனத் தெரிவித்துள்ளனர் என்றும் - இதனால் இப்பகுதிக் கால்நடைகள் நோயினால் நாளாந்தம் இறக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் - மக்கள் தெரிவிக்கின்றனர்.

கால்நடைகளுக்கான தடுப்பு மருந்துகளை ஏற்றுவதற்கு நிரந்தர கால்நடை வைத்தியரை நியமிக்க வவுனியா அரச அதிபர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர். (8-341)





பூநகரிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் "சங்கமம்" பத்திரிகை வெளியீட்டுவிழா கடந்த மாதம் 27ஆம் திகதி பூநகரிப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் எஸ்.கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவில் வாடியடிப் பிரதேசப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் தேசியக் கொடியை ஏற்றிவைப்பதையும், கூட்டுறவுச் சங்கப் பொதுச்சபை உறுப்பினர் பொன்.தங்கராஜா, நெறியாளர்குழு உறுப்பினர் இரா.செல்வராஜா ஆகியோர் மங்கள விளக்கு ஏற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பூநகரிச் செய்தியாளர்)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2004

## மாதிரி வினாத்தாள் இல.07

வினாத்தாள் -I நேரம் 45 நிமிடங்கள்

**பக்கம் 1**


★ **முதலாம் 2ஆம் வினாக்களில் தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடை எழுதுக.**

01) *காலைக்கதிரவன் வான் வரவே*
*கணிணைத் திறந்து நான் விழித்து*
*கோல நகையைக் காட்டிடுவேன்*
*குளத்தின் அழகைக் கூட்டிடுவேன்.*
மேலுள்ள பாடல் சூரியனைப்பற்றியது என்றால் "நான்" என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. அவ்வாறனறி தாமரை பற்றியது என்றால் "குளத்தின்" என்ற சொல்லின் கீழ்க் கோடிடுக.

02) *சீனி தின்றால் இனிக்கும்*
*மாங்காய் வாயில் புளிக்கும்*
*மிளகாய் வாயில் உறைக்கும்*
*பாக்கு நாவில் கயரும்*
*உப்பு சுவைக்க உவர்க்கும்*
மேலுள்ள பாடல் வரிகள் நாக்கைப்பற்றியது என்றால் "மிளகாய்" என்ற சொல்லின்கீழ்க் கோடிடுக. அவ்வாறன்றி "பல்சுவை" பற்றியது என்றால் "உறைக்கும்" என்ற சொல்லினைச் சுற்றி வட்டமிடுக.

★ **கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

03) சிந்துஜன் சம அளவான நீரைக் கீழுள்ள பாத்திரங்களான 1இலும், 2இலும் ஊற்றினான்.



(1) (2) (3) (4)

பின்னர் பாதிரம் 1இலுள்ள நீரைப் பாத்திரம் 3 இனுள்ளும், பாத்திரம் 2இல் உள்ள நீரைப் பாத்திரம் 4இனுள்ளும் ஊற்றினான். அப்போது பாத்திரம் 3,4 இன் நீர்மட்ட அளவு எவ்வாறு இருக்கும்.
I) இரண்டிலும் நீர்மட்டம் சமமாக இருக்கும்.
II) 3 இன் மட்டம் 4 இன் மட்டத்திலும் குறைவாக இருக்கும்
III) 4 இன் மட்டம் 3 இன் மட்டத்திலும் குறைவாக இருக்கும்
IV) 3இன் மட்டம் 4 இன் மட்டத்தைப் போல் இரு மடங்காய் இருக்கும்.


04) யானைக் கூட்டமொன்றில் உள்ள யானைகளின் துதிக்கைகள், வால்கள் என்பவற்றின் கூட்டுத் தொகையிலும் பார்க்க 10 கால்கள் கூடுதலாக இருந்தன. அங்குள்ள யானைகள் எத்தனை?
1) 5 2) 10 3) 15 4) 20

**பக்கம் 2**

05) ஓர் ஆசிரியரிடம் எப்போதும் காணப்பட வேண்டியது
1) புத்தகம் 2) வெண்கட்டி 3) சிவப்புப் பேனா
4) நல்லொழுக்கம்

06) ஒரு சிறுவன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வெளிநாட்டுக்குச் சுற்றுப்பயணம் சென்றான். அவனது தாயார் கொழும்பில் வசித்தார். சிறுவன் அங்கு இருக்கும் இடத்தில் நண்பகலாயிருக்கும்போது தாய் வசிக்கும் இடத்தில் நேரம் அதே நாள் காலை 5 மணியாகும். ஒருநாள் காலை ஏழு மணிக்கு அச்சிறுவன் தன் தாயாருடன் தொலைபேசியில் உரையாடினான். அப்போது அவனது தாயாரின் வீட்டில் என்ன நேரமாயிருக்கும்?
1) நண்பகல் 2) பி.ப 2.00. 3) பி.ப 5.00. 4) நள்ளிரவு.

07) மதுரன் கீழே உள்ளவாறு கோபுரத்தைக் குற்றிகளால் செய்தான். அதே கோலத்தைப் பின்பற்றும் இன்னொரு கோபுரத்தை அமைக்கிறான். அது ஆறு குற்றிகள் உயரமுள்ளது. புதிய கோபுரத்தில் எத்தனை குற்றிகள் இருக்கும்?



1) 60 2) 42 3) 36 4) 30

★ **பின்வரும் மரபுத் தொடர்கள் உணர்த்தும் கருத்துள்ள விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

08) "கை கொடுத்தல்" என்பது
1) வரவேற்றல் 2) உதவிசெய்தல் 3) வழிகாட்டல்.

09) "கண்வளர்தல்" என்பது
1) இறத்தல் 2) புத்தி உண்டாதல் 3) நித்திரைசெய்தல்.

**கீழே தரப்பட்ட பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

> தம்பி, தங்கையரே!
> கிணற்றில் அல்லது ஆற்றில் இருந்து கொண்டுவந்த நீரை கொதிக்க வைத்து ஆறிய பின் பருகவேண்டும். இல்லையேல் நோய்கள் பெருக வாய்ப்புண்டு.
> சுகாதாரப் பிரிவு.

10) இந்த அறிவுறுத்தல் எதனூடாக வெளியிடப்பட்டிருக்கும்?
1) வானொலி மூலம் 2) துண்டுப்பிரசுரம் மூலம்.
3) உரையாடல் மூலம்

11) இந்த அறிவித்தலை வழங்கியதன் நோக்கம்
1) ஆசிகூறுதல் 2) குறைகூறுதல் 3) நல்வழிகூறுதல்.

12) இந்த அறிவித்தல் எதற்காகக் கூறப்பட்டிருக்கும்.
1) கிணற்று நீர், ஆற்று நீர் என்பவற்றை நாம் கட்டாயம் பயன்படுத்தவேண்டும் என்பதற்காக.
2) வெள்ளம் வரும்முன் அணைகட்ட வேண்டும் அது போல நோய் வரும்முன் எம்மைப் பாதுகாக்க வேண்டும்.
3) நீரின் பல்வேறு பயன்களை அறிந்துகொள்வதற்காக.

**பக்கம் 3**

★ **கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

13) தாவரம் ஒன்றிற்கு மாத்திரம் உரிய இயல்பு எது?
1) காற்றுக்கு அசைதல் 2) நிழல் தருதல்
3) காய்த்தல் 4) வளர்தல். ( )

14) மழை பெய்யும்போது நிச்சயமாக நடக்கக்கூடியது எது?
1) இடி இடித்தல் 2) மின்னல் தோன்றுதல்
3) காற்று வீசுதல் 4) நிலம் நனைதல் ( )

15) கண்ணுக்கு காட்சி போல காதுக்கு
1) கேட்டல் 2) செவி 3) சத்தம் 4) தோடு ( )

16) தூயவன் - பையன், குகானா -
1) பெண் 2) சிநேகிதி 3) சிறுமி 4) பைத்தியக்காரி ( )

17) அழகு - மென்மை - இயற்கை ஆகிய மூன்று சொற்களுடனும் மிக நெருங்கிய தொடர்புடைய ஒரு சொல்.
1) மலர் 2) மரம் 3) சந்திரன் ( )

★ **கீழ்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

18) வீட்டிலிருந்து 2km தூரத்திலுள்ள கடைக்கு ஒரே சீரான வேகத்தில் சென்று வருவதற்கு நேரம் 30 நிமிடங்கள் எடுக்கும் எனின், 6km தூரத்தில் உள்ள தபால் நிலையத்திற்கு அதேவேகத்தில் போவதற்கு மட்டும் எவ்வளவு நேரம் எடுக்கும்.
1) 90 நிமி. 2) 60 நிமி. 3) 45 நிமி. 4) 15 நிமி.

19) ஒரு பண்ணையில் உள்ள ஆடுகளினதும், கோழிகளினதும் எண்ணிக்கை 15ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 48 ஆகும். அப்பண்ணையில் உள்ள ஆடுகளின் எண்ணிக்கை யாது?
1) 9 2) 6 3) 10 4) 12

★ **தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக்கொண்ட சொற் கூட்டங்களைத் தெரிந்து அதன் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

20) மயில் **கானகத்தில்** வாழும் **பட்சியாகும்.**
1) ஆரணியம், குருவி 2) காடு, உயிரினம் 3) வனம்,பறவை
4) அடவி,உணவு


21) அந்தக் கிராமத்தில் **கழனிகளும் பொய்கைகளும்** அதிகமாகும்.
1) காடுகள், மலர்கள் 2) வயல்கள், தடாகங்கள்
3) குளங்கள், ஆறுகள் 4) தோட்டங்கள், ஆறுகள்.

★ **எண்கோலத்தில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்களை எழுதுக.**

22)

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 5 | 11 | 23 | |


23)




**பக்கம் 4**

★ **பின்வரும் உருவை அவதானித்து விடை எழுதுக.**

24)



இங்குள்ள ஓர் உருவத்துக்குள் மட்டும் உட்பட்டிருக்கும் நட்சத்திரங்கள் எத்தனை? ..............................

25) இரு உருவங்களுக்கு மட்டும் உட்பட்டிருக்கும் நட்சத்திரங்கள் எத்தனை? ..............................

26) மூன்று உருக்களுக்கும் பொதுவாக இடம்பெற்றுள்ள நட்சத்திரங்கள் எத்தனை? ..............................

★ **பின்வரும் பழமொழிகளிற்குப் பொருத்தமான கருத்துக்களைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

27) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
1) மூத்தோர் கூறும் வார்த்தைகளை இளையோர் கேட்பதில்லை.
2) சிறு சுமைக்கு வளையாதவன் பெருஞ்சுமைக்கு வளைவானா?
3) இழமையில் பழகாத நற்பழக்கங்களை வளர்ந்த பின்பு பழகுவது சாத்தியமற்றது.

28) சிறுதுளி பெருவெள்ளம்
1) கொஞ்சம் கொஞ்சமாகச் சேமிக்கும்போது பெருந்தொகை பெறப்படும்.
2) கொஞ்சம் கொஞ்சமாகச் செலவுசெய்வதே இன்பம் தரும்.
3) மழை பெய்யப் பெய்ய வெள்ளம் பெருகும்.

★ **கீழுள்ள ஒவ்வொரு வினாவிலும் மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. முதலிரு கூற்றுக்களிலுள்ள தகவல்களின் அடிப்படையில் மூன்றாது கூற்றை ஊகித்துக்கொள்ள முடியுமெனின் (✓) எனவும், முடியாதெனின் (✗) எனவும் அடைப்புக்குறிக்குள் இடுக.**

29) Aயும் Bயும் தோசையை விரும்புகின்றனர்.
Bயும் Cயும் ஐஸ்கிறீம் விரும்புகின்றனர்.
ஆகவே Aயும் Bயும் ஐஸ்கிறீமை விரும்புகின்றனர். ( )

30) சுரேனும், சேகரும் சகோதரர்கள்.
சேகரும், சசிகரனும் சகோதரர்கள்.
ஆகவே, சுரேனும், சசிகரனும் சகோதரர்கள் ( )

31) ரதி அருந்ததியின் மகளாவாள்.
அருந்ததி சகுந்தலாவின் தாயாவாள்
ஆகவே, ரதியும் சகுந்தலாவும் சகோதரிகளாவார்கள்.( )

★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

32) TODVJL ஆகிய எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடி முன் காட்டினால் மாறுபட்டுத் தெரியும் எழுத்துக்கள் எல்லாவற்றையும் கொண்டவை எவை?
1) TOV 2) DVJ 3) DJL 4) TLV


**பக்கம் 5**

33) ஆண்களுக்கான ஓட்ட நிகழ்
என அழைப்பார்கள். அவ்வாறு
வரை எவ்வாறு அழைப்பர்?
1) வீரன்கள் 2) வீரள்

34) எழுபத்தைந்தாவது ஆண்டில்
1) அமுத விழா 2) பவளவிழ

35) எதற்கும் அஞ்சி நடுங்கும் இ
1) கயவன் 2) கோழை

★ **கடிகாரங்களின் தரவுகளின் ப**
**கீழுள்ள வினாக்களுக்குரிய வி**




முதலாவது கடிகாரத்தைவிட
கள் பிந்திக்காட்டுகின்றது.
4ஆவது கடிகாரம் 30 நிமிட
இரண்டாவது கடிகாரத்தைவி
நிமிடங்கள் முந்திக்காட்டுகி

36) மூன்றாவது கடிகாரம் காட்டு
1) 9.15 2) 8.15

37) ஆகமுந்தி நேரத்தைக் காட்
1) 1 2) 2

கீழே தரப்பட்டுள்ள குறியீடுகளு
தரப்பட்டுள்ளன. அவற்றை அவதா
யின் கீழ்க் கீறிடுக.




38) அதிக மழையும், கடுங்காற்று
1) யாழ்ப்பாணம் 2) நுவரெ
4) திருகோணமலை

39) பனி இல்லாத இடம் எது?
1)யாழ்ப்பாணம் 2)நுவரெலியா

40) கடுங்காற்று இல்லாது பனியு
இடம் எது
1) யாழ்ப்பாணம் 2) நுவரெலியா

**பக்கம் 6**

## வினாத்தாள் -II

**01) கீழே உள்ள பந்தியை வாசித்**
**களுக்கு விடை தருக**

பூமாதேவியைக் கெளவி மூடிக்
மெல்ல விலகிக்கொண்டிருக்கி
களை வாரி இறைத்ததுபோல
விண் மீன்களின் ஒளி குறைய
வானம் செக்கச் சி[illegible]து பிரக
பொன்மயமான கதிர்களைப் பூ
லப் படரவிடுகின்றான். கிழக்கு
மத்தியில் தங்கத்தகட்டைப் போ
கின்றான். "சூரியபகவானே வ
அவனை வரவேற்கின்றன. தாம
முகமலர்ந்து வரவேற்கின்றன

01) மேலே தரப்பட்ட பந்தியில் இ
எது?..............................

02) இக்காட்சி எழுதப்பட்டுள்ள

03) எதனது பிரகாசம் குறைவதா

04) தாமரை மலர்களின் துணை

05) பந்தியில் சூரியபகவானே வரு
குறியீட்டின் பெயரை எழுதுக

06) பந்தியில் உள்ள அடுக்குமெ

07) பந்தியில் சூரியனை எதற்கு

★ **ஒத்த கருத்துள்ள சொல்லை**

08) விண்மீன்கள்..............................

★ **எதிர்க்கருத்துள்ள சொல்லை**

10) ஒளி.............................. 11

★ **ஒருமைச் சொல்லை எழுதுக.**

12) வைரங்களை.............................. 13

★ **பெண்பால் சொல்லை எழுது**

14) அவனை.............................. 15)

★ **கீழ்வரும் ஆங்கிலச் சொற்களு**
**யில் இருந்து தெரிந்து எழுதுக**

16) SKY..............................
18) FLOWERS ..............................
20) LOTUS..............................


**02) கீழே இலங்கையிலுள்ள மத்**
**மான நூல்களும் அவர்களால் செ**
**களும் ஒழுங்கின்றித் தரப்படுகின்**

மதத்தவர்கள் - இந்துக்கள், 
கிறிஸ்தவர்க

நூல்கள் - திரிபீடகம், திருக்கு


ட்ட நிகழ்வில் வெற்றி பெறுபவரை வீரர் அவ்வாறு பெண்களில் வெற்றி பெறுப ழைப்பர்?
வீரள் 3) வீராங்கனை 4) வீராங்கி
ஆண்டில் எடுக்கப்படும் விழா
பவளவிழா 3) மணிவிழா 4) பொன்விழா
டுங்கும் இயல்புடையவன்
கோழை 3) மேதை 4) பேதை

**புகளின் படி நேரத்தைக் கணித்து அதன் ரிய விடையின் கீழ்க் கோடிடுக.**



த்தைவிட 2ஆவது கடிகாரம் 45 நிமிடங் ன்றது. முதலாவது கடிகாரத்தை விட 30 நிமிடங்கள் பிந்திக்காட்டுகின்றது. ரத்தைவிட மூன்றாவது கடிகாரம் 15 காட்டுகின்றது.
ம் காட்டும் நேரம் யாது?
3) 8.30 4) 9.30
தக் காட்டும் கடிகாரம் எது?
3) 3 4) 4

யீடுகளும் அதற்குரிய விளக்கங்களும் ந அவதானித்து வினாக்களுக்குரிய விடை




ங்காற்றும் உள்ள இடம் எது?
) நுவரெலியா 3) கொழும்பு
் எது?
வரெலியா 3)கொழும்பு 4)திருகோணமலை
து பனியும் அதிக மழையும் உள்ள
வரெலியா 3) கொழும்பு 4) திருகோணமலை.

**1மணி 15 நிமிடங்கள்**

**ய வாசித்து இல.1-20வரையுள்ள வினாக்**

வி மூடிக்கொண்டிருந்த காரிருள் மெல்ல ண்டிருக்கிறது. உச்சி வானத்தில் வைரங் ததுபோலப் பிரகாசித்துக்கொண்டிருந்த குறையத் தொடங்குகின்றன. கிழக்கு து பிரகா கின்றது. கதிரவன் தனது ளைப் பூமாதேவியின் மீது மெல்ல மெல் கிழக்கு வானிலே முகிற்கூட்டங்களுக்கு டைப் போல சூரியன் அசையத் தொடங்கு வானே வருக" எனச் சகல உயிர்களும் றன. தாமரை மலர்கள் தம் துணைவனை ற்கின்றன.

தியில் இயற்கை காட்டும் இன்பக் காட்சி
..............................
ட்டுள்ள காலம் யாது?..............
றைவதாகக் கூறப்படுகின்றது?
..............................
துணைவன் யார்?..............
னே வருக என்பது குறித்து நிற்கும் எழுதுக..............
அடுக்குமொழிச் சொல்லை எழுதுக?
..............................
எதற்கு உவமித்துக் கூறப்பட்டுள்ளது.
..............................

**சொல்லை எழுதுக.**
.............. 09) மத்தியில்..............
**சால்லை எழுதுக**
.............. 11) குறைய..............
**எழுதுக.**
.............. 13) விரிக்கின்றன..............
**எழுது**
.............. 15) துணைவன்..............
**சொற்களுக்குரிய தமிழ்ச்சொல்லை பந்தி எழுதுக**
.............. 17) LIGHT ..............
.............. 19) EAST..............
..............

**ள்ள மத்தவர்களும் அவர்களின் புனித களால் கொண்டாடப்படும் சமய விழாக் ரப்படுகின்றன.**
க்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், ஸ்தவர்கள்.
, திருக்குர்ஆன், பைபிள், வேதசிவாகமம்

**பக்கம் 7**

விழாக்கள் - நத்தார், தீபாவளி, வெசாக், ரம்ழான், நவராத்திரி, பொசன், ஈஸ்டர், ஹஜ்


மேலே தரப்பட்ட விவரங்களை அவர்களுக்குரிய வழிபாட்டுத் தலங்களின் கீழே 'ஆ' பகுதியில் நூல்களையும் 'இ' பகுதியில் விழாக்களையும் ஒழுங்குமுறையில் எழுதுக.


(1)


(2)

அ) ..............................
ஆ) ..............................
இ) 1) ..............................
2) ..............................

அ) ..............................
ஆ) ..............................
இ) 1) ..............................
2) ..............................


(3)


(4)

அ) ..............................
ஆ) ..............................
இ) 1) ..............................
2) ..............................

அ) ..............................
ஆ) ..............................
இ) 1) ..............................
1) ..............................

**03) பெருந்தெருக்களிலே காணப்படக்கூடிய வீதிச் சைகைகள் நான்கு கீழே தரப்பட்டுள்ளன. இவை வெளிப்படுத்தும் அறிவுறுத் தலைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

(1)

..............................

(2)

..............................

(3)

..............................

(4)

..............................

**பக்கம் 8**

**04) கீழே உள்ள நகரங்களுக்கிடையே உள்ள தூரம் காட்டப் பட்டுள்ளது. வரிப்படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடைகள் எழுதுக.**





01) அம்பாந்தோட்டையில் இருந்து காலியின் ஊடாக கொழும்பிற்கு உள்ள தூரம் யாது? ..............km
02) அம்பாந்தோட்டையில் இருந்து காலி, கொழும்பின் ஊடாக இரத்தினபுரிக்கு உள்ள தூரம் யாது? ..............km
03) அம்பாந்தோட்டையில் இருந்து இரத்தினபுரி ஊடாக கொழும்பிற்கு உள்ள தூரம் யாது? ..............km

**05) கீழுள்ளவற்றின் நிலைகளை அவதானித்து வெற்றிடங்களை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| மாட்டுவண்டி | மரம் | கிணறு |
| கடை | | பசு |
| கார் | வீடு | சைக்கிள் |

01) மாட்டுவண்டி சைக்கிளுக்கு..............திசையில் உள்ளது
02) கடை..............இற்கு மேற்குத் திசையில் உள்ளது
03) கிணறு மரத்திற்கு..............திசையில் உள்ளது
04) கார் சைக்கிளுக்கு..............திசையில் உள்ளது
05) சைக்கிள் கிணற்றுக்கு.............. திசையில் உள்ளது
06) ..............மரத்திற்கு தெற்குத் திசையில் அமைந்துள்ளது

**06) பின்வரும் பூச்சிகளின் பெயர்களை எழுதுக.**


(1) (2) (3)

.............. .............. ..............

**07) கீழுள்ள தமிழ்ச்சொற்களுக்குரிய ஆங்கிலச்சொற்களை எழுதுக**
1) கண்கள்.............. 2) கிராமம்..............
2) குடை.............. 3) தோட்டம்..............

**08) கீழேயுள்ள ஆங்கிலச்சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**
1). TREES.............. 2) ZOO..............
3) NIGHT .............. 4) BUTTERFLY..............

**பக்கம் 9**

**09) சரியான விடையை எழுதுக.**



01) இந்த அமைப்பு எதனைக் குறிக்கின்றது?
..............................
02) எதன் மூலம் சில்லு சுழலும்?
..............................
03) இதன் மூலம் எதனை உற்பத்தி செய்யலாம்?
..............................
04) சில்லுச் சுழலும் வேகத்தைக் கூட்ட யாது செய்யலாம்?
..............................

**10) சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01) மின்னைக் கடத்துவது (அலுமினியம், இறப்பர், கண்ணாடி)
02) ஆணிவேர்த்தாவரம் (நெல், வேம்பு, தென்னை)
03) நீரில்வேகமாகக் கரைவது (உப்பு, சர்க்கரை, யூரியா)
04) காந்தம் கவராத பொருள் (குண்டூசி, இரும்புத்தூள், இறப்பர்)
05) ஒளியைப் புகவிடும் பொருள் (மரம், கண்ணாடி, புத்தகம்)

**11) விலைப்பட்டியல் மூலம் விடையளிக்கவும்**

| விலைப்பட்டியல் | ரூபா சதம் |
|---|---|
| பயிற்சிப் புத்தகம் - 1 | 18.00 |
| அழிறப்பர் - 1 | 04.50 |
| பென்சில் - 1 | 12.75 |
| வரைதல் புத்தகம் - 1 | 18.50 |
| பேனா - 1 | 12.50 |
| நிறப்பென்சில்பெட்டி - 1 | 85.00 |

01) ஒரு பயிற்சிப் புத்தகம், ஓர் அழிறப்பர், ஒரு பென்சில் ஆகியவற்றை வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? ..........ரூபா........சதம்
02) பயிற்சிப்புத்தகமொன்று, வரைதல் புத்தகமொன்று, பேனாவொன்று ஆகியவற்றை விலைக்கு வாங்கி ரூபா 200.00 செலுத்தினால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? .......ரூபா........சதம்
03) அனுசன் அழிறப்பரொன்று, வரைதல் புத்தகமொன்று, நிறப்பென் சில் பெட்டியொன்று ஆகியவற்றை விலைக்கு வாங்கினான். அவன் அதற்கான பணத்தை காசுத்தாளொன்று மூன்று நாணயங்கள் மூலம் செலுத்தினான். அவை யாவை?..............
.............. .............. ..............
04) வினோஜனிடம் ரூ. 50.00 உண்டு. 2 பயிற்சிப் புத்தகங்களும் ஒரு நிறப்பென்சில் பெட்டியும் வாங்குவதற்கு இன்னும் எவ்வளவு பணம் தேவை? ..........ரூபா........சதம்
05) விதுர்சன் பட்டியலிலுள்ள அனைத்திலும் ஒவ்வொன்று வீதம் விலைக்கு வாங்கி தம்புட்டமும், மத்தளமும் அடிப்பவர்களினதும் உருவங்கள் உள்ள காசுத்தாளைக் கொடுப்பதால் அவனுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? .........ரூபா.........சதம்


**பக்கம் 10**

**12) கீழே தரப்பட்ட விவரத்தினை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

திருகோணமலை இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 5இல் கல்வி கற்கும் சுதாகரன் என்னும் மாணவனுக்கு அவனது மாணவர் விடுதிக் கட்டணமாக 450 ரூபாவை செலுத்துவதற்காக இல.25 மத்தியவீதி, விருது நகரில் வசிக்கும் அவனது தகப்பனாராகிய திரு.கமலசிங்கம் என்பவர் அப்பணத் தொகையைக் காசுக்கட்டளை மூலம் அனுப்பிவைத்தார்.

01) மேற்படி பணத்தினை அனுப்பும்போது எங்கு காசுக் கட்டளைப் படிவத்தினைப் பூர்த்திசெய்து அனுப்பவேண்டும்?
..............................

திரு.ம.கமலசிங்கம் அவர்கள் பணத்தினை அனுப்புவதாகக் கருத்திற்கொண்டு கீழுள்ள காசுக்கட்டளைப் படிவத்தினை நிரப்புக.


P.O.C
(M 8* S.T.&E.) 11/83
உள்நாட்டுச் சாதாரண காசுக்கட்டளை விண்ணப்பம்
APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER
(1) தொகை AMOUNT Rs. c. இல No.
(2) ரூபா. (சொல்லில்) Rupees (in Words)
(3) Payable at
(4) Name of Receipient (with initials)
(5) அனுப்புபவரின் பெயர் (முதல் எழுத்துகளுடன்) Name of Remitter (with initials)
(6) அனுப்புபவரின் முகவரி Address of Remitter
(7) திகதி Date
கையொப்பம்/Signature

**13) "நான் கல்விச் சுற்றுலா சென்றபோது.........." என்னுந் தலைப்பின் கீழ் ஆறுவாக்கியங்கள் எழுதுக.**
1)..............................
2)..............................
3)..............................
4)..............................
5)..............................
6)..............................

**தயாரிப்பு:**
**ஆசிரியர் வேலுப்பிள்ளை அன்பழகன்.**

# குரு பெயர்ச்சியால் எத்தகைய பலன் கிட்டும்?

3 குருபகவான் தற்போது சிம்மராசியில் இருந்து கன்னி ராசிக்குச் செல்கிறார். குரு பெயர்சசி வாக்கியப் பஞ்சாங்கப்படி இந்த ஆண்டு (2004) ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதியன்று நடக்கிறது. (திருக் கணித பஞ்சாங்கப்படி ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி குரு பெயர்சசி நிகழ்கிறது) இவர் 2005அம் ஆண்டு செப்ரெம பர் மாதம் 4ஆம திகதி வரை கன்னி ராசியில் இருப்பார்.

குரு பெயர்ச்சியினால் 12 இராசிகளின் பலன் மாற் றங்கள் தொடர்பான தகவல்கள் இங்கு தொடர்ந்து பரசுரமாகின்றன. நேற்றைய பத்திரிகையில் மிதுனம், கடகம் ஆகிய ராசிகளின் பலன்கள் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

## சிங்கம்

சிங்கராசி அன்பர்கள் சமுதாயத்தில் தனித்துவம் நிறைந்து காணப்படுவார்கள். நீங்கள் செய்யும் தொழில் எதிலும் தனிமுத்திரை பதிப் பீர்கள். உங்களுக்குக் கடந்த சில ஆண்டுகளாகக் குரு பகவான் சாதகமற்ற நிலையில்தான் இருந்தார்.

கடந்த ஓராண்டாக அவர் உங்கள் ராசியில் இருந்து சிற்சில இன்னல்களைக் கொடுத்திருப்பார். குறிப்பாகக் குடும்பத்தில் குழப்பமும், பிரச்சினைகளும் வந்திருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் ஏதேனும் ஒரு பிரச்சினையைச் சந்தித்துக் கொண்டே இருந்திருப்பர்.

அதேபோல், ராகு 9ஆம் இடத்தில் இருப்பதால் உங்கள் முயற்சியில் தோல்வியும் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு.

இந்த இடர்பாடுகளை 11இல் இருக்கும் சனியும், 3ஆம் இடத்தில் உள்ள கேதுவும் முறியடித்துப் பல்வேறு வகையில் முன்னேற்றத்தையே கொடுத்திருப்பார்கள்.

தொழிலில் லாபம், புதிய சொத்து வாங்குதல் போன்ற மகிழ்ச்சிகரமான நிகழ்வுகள் நடந்திருக்கும்.

தற்போது உங்கள் நட்புக் கிரகமான குரு பகவான் உங்கள் ராசியில் இருந்து 2ஆம் இடமான கன்னிக்குச் செல்கிறார். அவர் செல்ல இருப்பதுவும் நட்பு வீடுதான். இது உங்களைப் பொறுத்தவரை சிறப்பான அம்சம். இதுவரை குருவால் ஏற்பட்டுவந்த இடர்பாடுகள் அனைத்தும் இருக்குமிடம் தெரியாமல் மறையும்.

குடும்பத்தில் நிலவிவந்த குழப்பத்திற்கு விடுதலை கிடைக்கும். இதுதவிர, சனியின் நற்பலன்கள் தொடர்ந்து கிடைக்கும் என்பதால் வாழ்வில் செல்வம் கொழிக்கும். இதுதவிர, கேது 2005 பெப்ரவரி 28ஆம் திகதிவரை 3ஆம் இடத்தில் இருந்து தெய்வ அனுகூலத்தைக் கொடுப்பார்.

அதன்பின், கேது 2ஆம் இடத்திற்கு வருவது அவ்வளவு சிறப்பானது அல்லதான். ஆனால், அவர் 2ஆம் இடத்திற்கு வரும்போது அந்த இடத்தில் குரு இருப்பதால் வேதையின் அடிப்படையில் அவரால் கெடுபலனைக் கொடுக்க முடியாது.

கேது இடம்பெயரும். அதேநாளில் (28-02-2005) ராகுவும் இடம் மாறி 8ஆம் இடத்திற்கு வருகிறார். இதுகூட சுமாரான நிலைதான் என்றாலும் பலன்கள் மாறுபடும்.

முக்கிய கிரகங்களில் சனியும், குருவும் பக்கபலமாக இருப் பது கேது பெப்ரவரி வரை துணை நிற்பது போன்றவற்றைப் பார்க்கும்போது இது உங்களுக்குப் பொற்காலமாகவே இருக்கும். இதன்மூலம், நீங்கள் பல்வேறு சாதனைகளைப் புரியலாம்.

இனி மேற்கண்ட நிலையில் இருந்து விரிவான – பொது வான பலனைக் காணலாம்.

தொட்டதெல்லாம் பொன்னாகும் காலம். உங்கள் வாழ்க்கையில் தோல்வி என்ற நிலை இருக்காது. எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.

ராகுவால் சிறுசிறு தடைகள் வந்தாலும் அதைக் குருவின் பலத்தால் முறியடித்துக் காட்டுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயர்ந்து கொண்டே இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

குடும்பம் – குதூகலம் ஆரம்பமாகும். உறவினர்கள் வகையில் இருந்துவந்த பிரச்சினை அகலும்; தம்பதியின ரிடையே நிலவிய கருத்துவேறுபாடு மறையும்; பிரிந்திருந்த குடும்பம் ஒன்றுபடும். வீட்டுக்குத் தேவையான சகல வசதி களும் கிடைக்கும்.

ஆடம்பரப் பொருள்கள் வாங்கலாம். புதிய வீடு வாங்க வாய்ப்பு உண்டு. அல்லது தற்போது உள்ளதை விட வசதி கூடிய வீட்டிற்குக் குடிபுகலாம். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும்.

கடந்த சில ஆண்டுகளாகத் தடைப்பட்டு வந்த திரு மணம் கைகூடும். நல்ல வரனாகவும் அமையும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். விருந்து, விழாவெனச் சென்று வரு வீர்கள். உறவினர் வகையில் அனுகூலமான போக்கு ஏற்படும்.

சிலர் குடும்பத்தோடு கோவில் போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். பெப்ரவரிக்குப் பிறகு சிலரது வீட்டில் சிறுசிறு பொருள்கள் களவு போக லாம். சற்றுக் கவனம் தேவை.

உத்தியோகம் – கடந்த சில ஆண்டுகளாக வெளியில் சொல்ல முடியாத இன்னலுக்கு உள்ளாகி இருப்பீர்கள். அக்கம் பக்கத்தார் உங்களுக்கென்ன குறை என்று அங்கலாயித் திருப்பார்கள். ஆனால், உங்கள் மனக்குறையை அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள்.

இனிக் கவலையை விடுங்கள். உங்கள் மனம் விரும்பிய வகையில் அலுவலகத்தில் அனுகூலமான போக்குக் காணப் படும். வேலையில் நாட்டம் பிறக்கும். குருவின் பலத்தால் சிறப்படைவீர்கள். இதுவரை கிடைக்காமல் இருந்துவந்த பதவி உயர்வு கிடைக்கும்.

உங்களுக்குத் தடையாக இருந்தவர்கள் நண்பராக வர வாய்ப்புண்டு. மேல்அதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். சிலர் விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கப் பெறுவீர்கள். 2005 பெப்ரவரி முதல் நீங்கள் மேலும் பளிச்சிடுவீர்கள். வரு மானம் அதிகரிக்கும்.

வியாபாரம் – மேலும் வளர்ச்சி காணலாம். புதிய தொழில் அனுகூலம் ஆகும். சிற்சில வகையில் இருந்து வந்த தோல்வி – நஷ்டம் போன்ற இடர்பாடுகள் இருக்காது.

பணப்புழக்கம் அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். சிலர் அயல்நாட்டில் முதலீடு செய்வர். உங்களுக்குக்கீழ் வேலை பார்ப்பவர்கள் நம்பிக்கையுடன் இருப்பர். அரசு வகையில் எதிர்பார்த்த கோரிக்கைகள் நிறைவேறும்.

ஆனால், பெப்ரவரி மாதத்திற்குப் பிறகு அரசு வகை யில் அனுகூலமான போக்குக் காணப்படவில்லை. சிலர் திடீர் சோதனைக்கு ஆளாகலாம். எனவே, வரவு – செலவுக் கணக் கைச் சரியாக வைத்துக்கொள்ளவும்.

## கன்னி

கன்னி ராசி அன்பர்கள் மென்மையான அணுகு முறையைக் கொண்டவர் கள். உங்களது பண்பும், பணிவும், நேர்மையும் எல்லோரையும் மிக எளிதில் கவரும். பொதுவாக நல்ல செல்வாக்கும், செல்வமும் படைத்த வர்களாக இருப்பீர்கள். நயமான பேச்சும், நம்பகத்தன் மையும் கொண்டவர்கள் நீங்கள்.

குரு பகவான் இதுவரை உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் இருந்தார். அவர் பல்வேறு இடையூறுகளைக் கொடுத்து இருப்பார். பொருளாதார நஷ்டம் ஏற்பட்டு இருக் கும். சிலரது வாழ்க்கையில் துக்ககரமான சம்பவமும் திகழ்ந்து இருக்கலாம்.

அதுமட்டுமின்றி, சனி 10ஆம் இடத்தில் இருந்து தொழிலில் பிற்போக்கான நிலையை உருவாக்கி இருப்பார். உங்கள் செல்வாக்கையும் குறைத்திருப்பார். ராகு 8ஆம் இடத்தில் உள்ளதால் உங்கள் முயற்சியில் தடைகள் அதி கம் வந்திருக்கும்.

கேது 2இல் இருந்து அரசு வகையிலும் இன்னல்களை ஏற்படுத்தி இருக்கலாம். முக்கிய கிரகங்கள் எதுவுமே சாதகமற்ற நிலையில் இருந்ததால் நீங்கள் பட்ட கஷ்டத்தை நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. இந்தநிலையில் இருந்து நீங்கள் படிப்படியாக விடுதலையாக உள்ளீர்கள். எனவே, கவலை வேண்டாம்.

இந்தநிலையில் தற்போது குரு பகவான் உங்கள் ராசிக்கு அடியெடுத்து வைத்துள்ளார். இது அவ்வளவு சிறப்பான நிலை என்று சொல்ல முடியாது. ஆனாலும் அவர் 12ஆம் இடத்தில் இருந்ததுபோல கெடு பலன்களைச் செய்ய மாட்டார்.

பொதுவாக – பூஜென்ம ராமர் வனத்திலே சீதையைச் சிறை வைத்ததும்பூ– என்று ஜோதிடத்தில் ஒரு வாக்கு உண்டு. அதாவது, ராமரின் ஜாதகத்தில் 1ஆம் இடத்தில் குரு வரும்போது வனவாசம் செல்ல நேரிட்டது என்று கூறுவர்.

அந்த நிலை உங்க ளுக்குவராது. காரணம் ராமரின் ஜாதக நிலைவேறு. உங்களுடைய கிரக நிலை வேறு. ராமர் தெய்வ அவதா ரம். நாம் மனிதர்கள். குரு 1ஆம் இடத்தில் இருக்கும் போது கலகம், விரோதம் வரும் என்றும் மந்தநிலை ஏற்படும் என்றும் பொதுவாகக் கூறப்படுவது உண்டு.

குரு பகவான் சாதக மற்ற நிலையில் இருந்தா லும் அவர் உங்களுக்குக் கெடு பலன்கள் அதிகம் செய்யமாட்டார். காரணம் உங்கள் ராசியான கன்னி அவருக்கு நட்பு வீடு.

நட்பு வீட்டில் இருந்து கொண்டு கெடு பலன் களைச் செய்ய எப்படி மனம் வரும். அதோடு குருவின் அனைத்துப் பார்வைகளும் சிறப்பாக உள்ளது. குரு வின் பார்வைக்குக் கோடி நன்மை உண்டு.

மேலும் வேதையின் அடிப்படையில் 2005பெப்ர வரி 28இற்குப் பிறகு குருவுக்கு வேதையாகக் கேது வருவார். அந்தவகையில் பார்த்தாலும் குருவால் கெடு பலனைச் செய்ய முடியாது.

மற்ற முக்கிய கிரகங்களில் சனியை எடுத்துக் கொண்டால் அவர் உங்கள் ராசிக்கு 10ஆம் இடத்தில் இருக்கிறார். தொடர்ந்து அதே இடத்தில் நீடிப்பார். அவரால் சிற்சில பிற்போக்கான நிகழ்வுகள் வரலாம்.

தற்போது 8இல் இருக்கும் ராகு 2005 பெப்ரவரி 28ஆம் திகதி 7ஆம் இடத்திற்கு வருகிறார். இதுவும் சிறப்பான நிலை அல்ல. ஆனால், முன்புபோல் உங்கள் முயற்சியில் தடைகளை உருவாக்கமாட்டார். அவரால் குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வரலாம். அதேநேரம் கேது உங்கள் ராசிக்கு வருகிறார்.

ராசியில் வந்தபின் அவர் முன்னேற்றத்திற்குத் தடையை

சோதிட வித்தகர்
காழியூர் நாராயணன்

உருவாக்கலாம். ஆனால், அவருக்கு வேதையாகக் குரு இருப்பதால் கேதுவால் எந்தக் கெடுபலனும் வராது.

மேற்கண்ட நிலையில் இருந்து விரிவான – பொதுவான பலாபலன்களை இனிக் காணலாம்.

நீங்கள் எடுத்த காரியங்கள் நிறைவேறும். ஆனால், அதில் சிறுசிறு த்டங்கல்கள் குறுக்கிடலாம். எது எப்படி யானாலும் அதனைச் சாமர்த்தியமாக முறியடிப்பீர்கள்.

குறிப்பாக, 2005ஆம் ஆண்டு முதல் எடுத்த காரி யத்தை மிகவும் வெற்றிகரமாகச் செய்துமுடிப்பீர்கள். பணப் புழக்கம் அதிகமாக இருக்கும். சிக்கனமாக இருப்பது நல் லது. மதிப்பு, மரியாதை சீராக இருக்கும். முன்பைவிட உங்கள் செல்வாக்குக் கூடும்.

குடும்பம் – கடந்த ஆண்டு இருந்த பிரச்சினைகள் மறையும். மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன்–மனைவி இடையே அன்பு அதிகரிக்கும். விருந்து விழா என்று சென்று வருவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் கிடைக் கும்.

சுப காரியங்கள் நடக்கும். தடைப்பட்ட திருமணம் கைகூடும். 2005 மார்ச் மாதத்தில் இருந்து ராகுவால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பம் வரலாம். விட்டுக் கொடுத்துப் போகவும்.

சிலர் குழந்தைப் பாக்கியம் பெறுவர். சிலர் தீவிர முயற்சி எடுத்துப் புதிய வீடு கட்ட வாய்ப்பு உண்டு. அல்லது வசதி யான வீட்டுக்குக் குடிபுகுவர்.

உத்தியோகம்– கடந்த ஆண்டு ஏற்பட்ட பிற்போக்கான நிலையில் இருந்து மேன்மை காண்பர். உங்களுக்கு இருந்து வந்த தடைகள் ஓரளவு விலகும்.

வேலைப்பளு இருந்தாலும் அதற்குரிய வருமானம் கிடைக்காமல் போகாது. சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உண்டு. வழக்கமான சம்பள உயர்வு, சலுகைகள் கிடைப்பதில் எந்தத் தடையும் ஏற்ப டாது. விரும்பிய இடத்துக்கு மாற்றம் கிடைக்கும்.

வேலை இன்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. அரசு ஊழியர்களுக்கு இருந்து வந்த பிரச்சினை மறையும்.

வியாபாரம்– சற்று முயற்சி எடுத்து உழைக்க வேண் டியது இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன்கள் கிடைக் காமல் இருக்காது. சனியால் ஏற்படும் தடைகளைக் குருவின் பார்வையால் உடைத்து எறிவீர்கள்.

(வளரும்)

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
04.08.2004
நெல்லியடி கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த
பத்திநாயகன் – டஸ்லின் புஸ்பா
தம்பதிகளின்
செல்வப் புதல்வி
செல்வி பத்திநாயகன் செலின்
தனது முதலாவது பிறந்தநாளை தனது
இல்லத்தில் இன்று (04.08.2004) புதன்கிழமை
வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை
டோஹாவில் இருக்கும் அன்பு அப்பா மற்றும் அம்மா, பிரான்ஸிலிருக்கும் ஞானப்பெற்றோர், அப்பம்மா, பெரியப்பா குடும்பம் (கொழும்பு), சித்தப்பா குடும்பம், அத்தை குடும்பம், முத்தமாமா குடும்பம், ஆசைமாமா குடும்பம் (பிரான்ஸ்), சின்னமாமா குடும்பம் (பிரான்ஸ்), பெரியம்மா குடும்பம் (பிரான்ஸ்), குட்டிமாமா (பிரான்ஸ்) மற்றும் அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள் அனைவரும் கரவை புனித அந்தோனியார் அருள் பெற்று சீரும் சிறப்புமாய் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

முடக்காடு வீதி,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி
(34831)
வாழ்த்துவோர்:
கே.அ ரன் (முத்தமாமா)

# தமிழரின் வரலாற்றுத் தவறுகளே இன்றைய நிலைக்குக் காரணம்!

## விளக்கம் தருகிறார் கலாநிதி குணராசா



"இலங்கை வரலாற்றில் தொடர்ச்சியாக இடம்பெற்ற தவறுகளே இலங்கைத் தமிழர்களது இன்றைய அவல நிலைகக்குக் காரணமாகிவிட்டது. இந்தத் தவறு குவேனி காலந்தொட்டு அண்மைக் காலம் வரை நீடித்து வந்துள்ளது. எமது அரசியல்வாதிகள் மொழி உரிமைக்காகப் போராடினார்களே அன்றி நிலம் பறிபோவதைப் பெரிதாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை" - இவ்வாறு தெரிவித்தார் கலாநிதி க.குணராசா.

யாழ்.கூட்டுறவாளர் சங்க கேட்போர் மண்டபத்தில் நடைபெற்ற "இராவணேசன் இந்திர உலா" நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்திய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

விஜயனது வருகைக்கு முன் இந்த நாட்டில இயக்கர், நாகர்களுடைய இராச்சியங்கள் இருநதன. அவை தமிழ் இராச்சியங்களே. விஜயன் இந்தியக் கரையில் பல இடங்களில் தரை இறங்க முயற்சித்தபோது அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படவில்லை.

இலங்கையில் அவனுக்கு அடைக்கலம் கொடுக்கப்பட்டதுடன், குவேனி தனது கட்டிலிலும் பங்குகொடுத்தாள். இதனால், முதன் முதலாக நாட்டின் பெரும்பகுதி பறிபோயிற்று. தமிழ் அரசர்களிடையே ஏற்பட்ட பகைமையை நீக்கப் புத்தபெருமான் தலையிட்டதாகவும் கூறபபடுகின்றது.

இலங்கையின் வடபகுதியில் வன்னியின் பூநகரிப்பகுதியில் தமிழ் இராச்சியங்கள் நீடித்து நிலைத்திருந்தன. இங்கிருந்து தெற்கு நோக்கிப படைஎடுத்தவர்களை இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்று மகாவம்சம் தவறாகக் குறிப்பிடுகின்றது.

**பூநகரியில் தமிழ் இராச்சியம்**

அண்மையில் கிடைத்த தொல்பொருள் ஆதாரங்கள், பூநகரியில் தமிழ் இராச்சியங்கள் பலம்பெற்று இருந்ததென்பதை ஆய்வு ரீதியாக நிரூபிக்கின்றது.

அனுராதபுர இராச்சியத்தை 44 ஆண்டுகள் ஆட்சிசெய்த எல்லாளன் (64 வயதுக்கு மேற்பட்டவன்), இளைஞனான துட்டகைமுனுவுடன தனிச்சண்டைக்குச் சம்மதித்தது அடுத்தமைந்த பெரும் வரலாற்றுத் தவறாகும். இதனால் எமது நிலம் மீண்டும் பறிபோயிற்று. ஐரோப்பிய வருகையின் பொழுது வடக்கே தமிழ் இராச்சியம் இருந்தமைக்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு. தமிழ், சிங்கள இராச்சியங்களுக்கு இடையில் 60 மைல் அதிகமான காடு எல்லையாக இருந்தது. வடக்கில் இருந்து அம்பாறை வரை பரந்திருந்த காடுகள் குடியேற்றத் திட்டங்கள் மூலம் பறித்தெடுக்கப்பட்டுள்ளன.

சுதந்திரம் கிடைத்த பொழுது இங்கு ஒரு முகமது அலி ஜின்னா இருக்கவில்லை. காரணம் ஐக்கிய இலங்கைக்குள் சுமுகமான முறையில் வாழலாம் என்ற நம்பிக்கை இருந்தது. 1915இல் சிங்கள முஸ்லிம் கலவரத்தை யடக்க லண்டன் சென்று திரும்பிய சேர் பொன். இராமநாதனுக்குத் தென் இலங்கையில அளிக்கப்பட்ட வரவேற்பும் (குதிரையை அகற்றி விட்டு வண்டிலை கையால் ஊர்வலமாக இழுத்தார்கள்) படித்த இலங்கையருக்கான அவரது பிரதிநிதித்துவமும் காரணமாயின. இதுவும் வரலாற்றுத்தவறாகியது.

எமது பிரதிநிதிகள் சோல்பரி அரசியற் திட்டத்தை ஏற்றுக்கொண்டதும் சுதந்திரத்தின் பின் போராடிய நாங்கள் எமது நிலம் கல்லோயா, கந்தளாய், அல்லை, சேருவேல என பறிக்கப்பட்ட பொழுது போராடத் தவறி விட்டோம்; பெரிதாகக் கவனிக்கவில்லை.

இத்தகைய எமது தவறுகளே இலங்கை முழுவதையும் ஆண்ட தமிழ் அரசனான இராவணனின் நிலம் பறிபோகக் காரணமாயிற்று என்றார் அவர். (ப-88)

# பாடசாலைக் கல்வியைப் போலவே விளையாட்டிலும் அக்கறை காட்டுக!

வலி.வடக்கு,ஓக.4

தென்இலங்கையில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கல்வியுடன் கிரிக்கெட் மற்றும் விளையாட்டுக்களையும் இணைத்தே கற்பித்து வருகினறார்கள். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில கல்வியில் காட்டும் அக்கறை, முக்கியத்துவத்தை விளையாட்டுத்துறையில் காட்டுவதில்லை.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வணிகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருள்வேல் குறிப்பிட்டார்.

சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆசிரியர் சி.சீராளன் தலைமையில் இடம்பெற்றது. அங்கு தொடர்ந்து உரையாற்றிய க.அருள்வேல்,

உலக நாடுகள் இன்று கிரிக்கெட் விளையாட்டில் அதிக அக்கறையும் கவனமும் செலுததிக்கொண்டு இருக்கின்றன. இந்நிலைமைக்குக கூடக் காரணமாக இருப்பது கிரிக்கெட் விளையாட்டு அதிக அளவில் பணவருவாயை ஈட்டிக கொடுப்பதே ஆகும்.

தென்பகுதியில் கிரிக்கெட் விளையாட்டு பரவலாக வளர்க்கப்பட்டு வருகின்றது. அவர்களுக்குச் சமனாக இங்கும் கிரிக்கெட் வளர்த்து எடுக்கப்படவேண்டும். இதற்கு யாழ்ப்பாணத்தில இருக்கும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

சீராளன் தனது தலைமை உரையின்போது,

பல்வேறு நெருக்கடிகளுக்கும் சிரமத்திற்கும மத்தியிலுமே இவ்விளையாட்டுக்கழகம் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. நகரப்புறத்தை அண்டி இருந்த கிரிக்கெட் விளையாட்டைக் கிராமப் புறத்திலும் நாம் வளர்த்து எடுத்துக்கொண்டு இருக்கின்றோம் என்று கூறினார். (ப-86)

# சமூக நற்பண்புகள் மறைவதற்கு சாரணீயம் அருகிவருவதே காரணம்

யாழ்ப்பாணம்,ஓக.4

பாடசாலைகளில் சாரணீயம் அருகிவருவதனால் சமூக நற்பண்புகள் மறைந்து வருகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் பருத்தித்துறை சாரணர் உதவி ஆணையாளரும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபருமான ந.சிவகடாட்சம்.

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த சாரணமாணவர்களுக்கான 3 நாள் வதிவிடப்பயிற்சிப்பாசறையின் இறுதியாகச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய சமூகத்தில் இரக்க மனப்பான்மை, பெரியோரைக் கனம்பண்ணும் தன்மை, பணிவு போன்ற சமூக நற்பண்புகள் குறைவதற்கான காரணம், மாணவர்களுக்குச் சாரணீயம் போன்ற சிறந்த சமூக மயமாக்கல் பயிற்சிகள் வழங்கப்படாமையே ஆகும்.

இன்றைய மாணவர்கள் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் என அலைந்து திரிவதனால் சாரணீயம் போன்ற பயிற்சி அனுபவங்களில் ஈடுபடுவதற்குப் போதிய நேரம் கிடைப்பதில்லை. சமூக நற்பண்புகள் வளர சாரணீயம் போன்ற பயிற்சிகள் அவசியமானவை. பாடசாலைகளில் சாரணீயம் மறுமலர்ச்சி அடையும்போது மட்டுமே நல்லொழுக்கம் நிறைந்த மாணவர் சமூகத்தைப் பாடசாலைகள் உருவாக்க முடியும் - என்றார்.

பருத்தித்துறை சாரணர் மாவட்டப் பயிற்சிக்குப பொறுப்பான உதவி ஆணையாளர் குழந்தைவேலு தனது உரையின்போது,

சாரணனான ஒரு மாணவன் எப்பொழுதும் தனது நல்லொழுக்கச் செயற்பாடுகள் மூலம் சாரணீயத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்குப் பின்னிற்கக் கூடாது.

மனித விழுமியங்கள் மறைந்து வரும் இக்காலத்தில் பாடசாலைகளில் குருளைச் சாரணா அமைப்புக்கள் சாரணீயப் பயிற்சிகள் மீண்டும் புத்துயிர்ப்பு அடைவது காலத்தின் தேவை - என்றார்.

இந்நிகழ்வில் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி சாரணீயப் பொறுப்பாசிரியர் வே.சண்முகலிங்கம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி சாரணீயப் பொறுப்பாசிரியர் பேரின்பநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (ப)

# சுற்றுச்சூழலைப் பாதுகாத்து நோய் பரவாமல் தடுப்போம்

நீர்வேலி,ஓக.4

நாட்டில் டெங்குக்காய்ச்சல் போன்ற நோய்கள் அதிகரித்து மக்களைப் பெரிதும் துன்புறுத்துகின்ற இவ்வேளையில் நாங்கள் எமது சுற்றுச் சூழலைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது அவசியமாகும் என நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வலி.கிழ.பிரதேச சபையினரால் நடத்தப்பெற்ற சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா குறிப்பிட்டார்.

வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் க.வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்: குட்டைகளிலும், பேணிகள், சிரட்டைகளிலும் மழைநீர், கழிவுநீர் என்பன தேங்கி நிற்பதால் அவற்றில் நுளம்புகள் முட்டையிட்டுப் பெருக வாய்ப்புண்டு. எனவே, இவற்றில் கண்காணிப்பாக இருந்து அவற்றைத் தூய்மைப்படுத்த வேண்டியது எம் எல்லோரினதும் கடமையாகும். மேலும் பொலித்தீன் பாவனையின் பின் வெற்றுப பொலித்தீன் போத்தல்கள், பைகள் என்பன சூழலை மாசடையச் செய்கின்றன. எனவே இப் பாவனையைக் கட்டுப்படுத்துவதன மூலம் நாம் எமது சூழலைப் பாதுகாக்க வேண்டும். சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் பணியில் இப்பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகள் அக்கறையுடன் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற இக்கருத்தரங்கில் வலி.கிழக்குப் பிரதேசசெயலக திட்டமிடல் அதிகாரி ஆ.கதிரமலைநாதன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம.தயாபரன், வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.யாழவன், அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இ.குணநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (ப-110)




# இயந்திரங்களைப் போன்று மாணவரை நடத்தக்கூடாது

## தே.க.கல்லூரி உபபீடாதிபதி கருத்து

வலி.தெற்கு,ஓக.4

"மாணவர்களைச் சமநிலை ஆளுமை, ஆக்கத திறன் கொண்டவர்களாக ஆக்கும் உயிர்த்துடிப புள்ள களங்களாகப் பாடசாலைகள் விளங்க வேண்டும்."

ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலய தமிழ்த்தினப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் விழா நடைபெற்றது.

உபபீடாதிபதி பா.தனபாலன் மேலும் கூறியதாவது:-

இன்று மாணவர்கள் 'றோபோ' இயந்திரங்கள போலச் செயற்பட்டு வருகின்றனர். இதனால் மானுடநேயமற்ற, ஆக்கத்திறனற்ற, நாட்டுப்பற்றற்ற எதிர்கால சந்ததிகள் உருவாகப்போகின்றார்கள். மாணவர்கள் இன்று அசைவு, ஆற்றுகை, இடபெயர்வுகள் எதுவுமின்றி வகுப்பறைகளுக்குள் கட்டுப்படுத்தப்படுகின்றனர். பரீட்சையை மையமாகக் கொண்டு பாடசாலைகள், தனியார் கல்விக் கூடங்கள், வீடுகளில் மாணவர் இயந்திரங களைப் போல செயற்படுவதனால் மனச்சோர்வடைந்து விரக்தியடைகின்றனர்; வன்முறைகளில ஈடுபட முனைகின்றனர். இவற்றை மாற்றியமைக்கப் பாரம்பரிய கலை, அழகியல், இலக்கியங்கள என்பவற்றை நயக்கவும், வாசிக்கவும், விளையாட்டுக்களில் ஈடுபடவும் செய்யவேண்டும்.


மாணவரின் ஐம்புலன்களுக்கும் இதமூட்டக கூடிய எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள், அறிவு என்பவற்றைத் தூண்டக்கூடிய அழகியல் மற்றும் இலக்கிய ஆக்கங்களில் ஈடுபட வைக்க வேண்டும் - என்றார்.

மாணவர்களின் பாடல், நடனம், நாடகம், வில்லுப்பாட்டு என்பனவும் நடைபெற்றன. (152)

## அபிவிருத்தி பற்றிப் பேசினால் போதாது

# கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்

யாழ்ப்பாணம்,ஓக.4



அபிவிருத்தி தொடர்பாக அரச அதிகாரிகளுடன் பேசுவது மட்டும் பிரச்சினைக்குத் தீர்வாகாது. ஆண்டு தோறும கிடைக்கின்ற நிதிகளைப் பயன்படுத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் விதத்தில் நாம் செயற்பட வேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் திணைக்கள ரீதியாகச் செயற்படுத்தும் திட்டங்களின் 2003ஆம் ஆண்டுக்கான திட்டங்களைப் பரிசீலித்தலும் 2004ஆம ஆண்டுக்கான திட்டங்களை ஆராய்தலும் என்னும் விடயம் சார்பாக இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கென ஒதுககப்படும் நிதி திட்டவட்டமாக ஒரு நிர்வாகக் கட்டமைப்புடன் செய்யவேண்டிய அவசியத்தை உணர்ந்து அதற்குச் சட்டவடிவம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் 'தன்னாட்சி அதிகாரசபை' என்னும் வரைபைக் கொடுத்தபோது அரசு பேச்சுக்கு உடன்பட்டது. இதனைச் சர்வதேச நிதி வழங்கும் நாடுகளும் வரவேற்றன.

போரின் பாதிப்பால் இலங்கை முழுவதும் பொருளாதார ரீதியாகச் சீகுலைந்துள்ள இந்த நிலையில் உலக நாடுகள், நிதி நிறுவனங்கள் போன்றவற்றின் நிதியைப் பயன்படுத்துவதற்குச் சமாதானம் ஏற்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள்.

நாங்கள் எமக்குக் கிடைக்கும் நிதிவளங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும் தர்க்கரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் பல பிரச்சினைகள் இருந்தபோதும் அபிவிருத்திப் பணிகள் சம்பந்தமாகவும் நாம் கவனம் செலுத்தவேண்டும் என்றார்.

இக்கலந்துரையாடலில் கல்வி, சுகாதாரம், வீதிகள், விவசாயம், உள்ளூராட்சி போன்ற திணைக்களங்களுடையதும், மாநகரசபை, பனை அபிவிருத்திச்சபை, மின்சாரசபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை போன்றவைகளுடையதும் திட்டங்கள், தேவைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை.சேனாதிராசா, என்.ரவிராஜ், எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம்,எஸ். சிவனேசன், ம.க.ஈழவேந்தன், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, உதவி அரச அதிபர் வீரபத்திரபிள்ளை ஆகியோர் உட்பட யாழ். செயலக அதிகாரிகளும் பிரதேச செயலர்கள், திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ப-202-204)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள 200 xxxx தொடர் இலக்கம் கொண்ட முச்சக்கரவண்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: J.கோபி, 167, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.(34860)

## வீடு விற்பனைக்கு

பண்டத்தரிப்பு, சில்லாலை Dr.பாக்கியநாதன், M.C. வீட்டுக்கு முன் 4½ பரப்புக் காணியுடன் கூடிய புதிய (முற்றுப்பெறாத) வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு T.P.:226 3494, மு.செல்வராசா, தும்பளை, பருத்தித்துறை அல்லது யோய்ஸ் பார்மஸி, பண்டத்தரிப்பு. (34862)

## மணமகன் தேவை

வடமராட்சி, உடுப்பிட்டியில் வசிக்கும் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33 வயதுடைய, மிருகசீரிட நட்சத்திரமும், செவ்வாய்க் குற்றமில்லாத (பாவக்கிரகம் 39½), B.Com. பட்டதாரியான, பொதுநிற மணமகளுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் தொழில்புரியும் மணமகன் தேவை. தொடர்பு: P.T.P. திருமண சேவை, மானிப்பாய், யாழ்ப்பாணம். (34829)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் இன்று (04.08.2004) மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. (34791)

## மணமகன்கள் தேவை

1976ஆம் ஆண்டு - குற்றமற்ற, 1978ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றமுள்ள பாவம்கூடிய கனடா அத்தோடு, 1982ஆம் ஆண்டு பிரான்ஸ், 1971ஆம் ஆண்டு - செவ்வாய்க்குற்றமுள்ள, ஆஸ்திரேலியா இந்நாட்டில் சிற்றிசன் உள்ள மணமகள்மாருக்குப் படித்த, பட்டதாரி மணமகன்கள் தேவை. தொடர்பு: 361, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (34867)

### D.I.M.S.பட்டதாரிகளின் கவனத்திற்கு!

கொழும்பு பல்கலைக்கழகம் உள்நாட்டு மருத்துவ நிறுவனம் உட்பட வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்ற சகல பட்டதாரிகளையும் சுயவிவரங்களுடன் 04.08.2004 (புதன்) காலை 9.00 (புதிய நேரம்) மணிக்கு Dr.S. சபாநாதன், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் இல்லத்தில் தவறாது சமூகம் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு:
Dr.க.இராஜரெட்ணம்
தொலைபேசி இல.: 021 222 2726
(34858)

# மாபெரும் கால்பந்தாட்டப் பெருவிழா

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம், தமிழீழ விளையாட்டுத் துறை, யாழ். உதைபந்தாட்டச் சங்கம் (லீக்) ஆகியவற்றின் அனுசரணையுடன் கழக மாவீரர்களின் ஞாபகார்த்த மாபெரும் கால்பந்தாட்டப் பெருவிழா.

யாழ். மாவட்டம், வலி. வடக்கு, பருத்தித்துறைக் கழகங்கள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை 08.08.2004இற்கு முன்னர் - கழகத் தலைவர் / செயலாளர் எவரெஸ்ட் வி.கழகம், ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தலைவர்/செயலாளர்,
எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம்,
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

விளம்பர அன்பளிப்பு:
நியூ விதூஷன் நகைமாடம்
இல.6, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/36412)(42-17-19-24)

# G.A.Q. 2005 - 2006 பேரோதனை (வெளிவாரி)

இப்பாடநெறிக்கு கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் இவற்றில் பேரோடம் சித்தி அடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் தகுதி உடையவர்களாவர்.

இதற்குரிய சகல பதிவுகளும் எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்.

பதிவுகள் ஆரம்பம்: 05-08-2004

இதற்குரிய விரிவுரை ஆரம்பம்:
21-08-2004 காலை 9 மணி

விவரங்களுக்கு:
S.அருள்நங்கை.

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(34866)(42)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில் | அமலன் அடியில் |
|---|---|
| 22 – 03 – 1931 | 04 – 07 – 2004 |

## அமரர் ஜோசப் மரியதாசன்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

தாழ்மையிலே தொட்டில் கட்டி
ஏழ்மையிலும் மெத்தையிட்டு
எமை உருவாக்கிய எந்தையே
எங்கு சென்றீர் எமைப்பிரிந்து!
முப்பத்தொரு நாள்கள் உருண்டோடி மறைந்ததையா!
மூவேளைப் பொழுதினிலும் உம் நினைவே வாட்டுதையா!
உதிரத்தை வியர்வையாக்கி உயிருள்ளவரை
உடல் நோயும் வருத்திடவே எமக்காக உழைத்தீரே!
உமது ஆன்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*இவரின் ஆன்ம சாந்திக்காக இன்று (04-08-2004) காலை 6.30 மணியளவில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியிற் கலந்து கொண்டு இதன்பின் நடைபெறும் காலை உணவிலும் கலந்து இவரின் ஆன்மசாந்திபெற இறைஞ்சுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*தென்மூலை,*
*அச்சுவேலி.*

பிரிவாற் துயருறும்:
பாசமிகு மனைவி, சகோதரி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(C/36410)(42-17-19-24)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| அன்னையின் மடியில் | ஆண்டவன் அழைப்பில் |
|---|---|
| 25 - 10 - 1946 | 06 - 07 - 2004 |

## திருமதி கந்தசாமி மகேஸ்வரி

ஆலமரமாய் நீங்கள் இருக்க
அதன் நிழலில் வாழ்ந்திடுவோமென
ஆசையோடு காத்திருந்தோம்
அந்தரத்தில் தவிக்கவிட்டு ~ எம்
தந்தையோடு சென்றதேனோ!

எமது தாயாரின் இறுதிக்கிரியையின்போது அனுதாபச் செய்திகளை அனுப்பி பல வழிகளிலும் ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், நாளை (05.08.2004) வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*கரவெட்டி தெற்கு,*
*கரவெட்டி.*
(34863) (24-17-19-24)

தகவல்:
மகன் - பார்த்தீபன்.

# சேவைநலன் பாராட்டு விழா

35வருட சேவை நிறைவை 03.06.2004இல் பெற்று
இன்று விழாக்காணும்



## திருமதி நித்தியலஷ்மி நல்லைநாதன்

(பயிற்றப்பட்ட மனைப்பொருளியல் ஆசிரியர் தரம் I,
பகுதித் தலைவர், யா/சென்மேரிஸ் வித்தியாலயம்,
பகுதி நேர விரிவுரையாளர் - கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலை)

குடும்பத்தில் குத்துவிளக்காய் மிளிர்ந்து
குவலயம் போற்றும் கல்விச் சுடரை
நிறைவுறக் கற்பிக்கும் நல்லாசானாம்
நித்தியலஷ்மி – வித்தியாலயம் தனில்
நற்பகுதித் தலைவியாய் செம்மையுறப்
பணிபுரிந்து அரசினர் பயிற்சிக் கலாசாலையினில்
பகுதிநேர விரிவுரையாளராய் பண்புடன்
மாணவர் நலன் சிறக்க உழைத்த
கலங்கரை ஒளியான குருவே!
இந்நன்நாளில் இன்புற வாழ்த்துகின்றோம்.

யா/சென்மேரிஸ் வித்தியாலயம் (O.L.R),
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
[34856][42-17-19-24]

# இதய அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 ~ 04 ~ 1928 | 01 ~ 08 ~ 2004 |

மெலிஞ்சிமுனை, ஊர்காவற்றுறையைப்
பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சந்தியாகு ராயப்பு

அன்பின் ஒளிவிளக்கே!
பண்பின் சிகரமே!
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் எம்முடன் பழகி
எல்லோருடனும் அன்பு மழை பொழிந்து
எல்லா நாளும் எம்முடன் சிரித்து
பழகிய நீர்
சொல்லாமல் பேசாமல் சென்றீரே
உம்பிரிவால்
நொந்து நெருட துடிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதித்திருப்பலி இன்று (04.08.2004) புதன்கிழமை கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, மாலை 2.00 மணிக்கு மெலிஞ்சிமுனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*மெலிஞ்சிமுனை,*
*ஊர்காவற்றுறை.*
(34846) (43-17-18-24)

- குடும்பத்தினர்.

# அமெரிக்க தேசம் தற்போது பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளது

## அதிபர் புஷ் அறிவிப்பு

வாஷிங்ரன்,ஓக.4

அமெரிக்க பெருநகரங்கள் மீது அல்கெய்டா தாக்குதல் இடம்பெறக்கூடும் என்ற அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும் அதேவேளை, அமெரிக்க தேசம் ஆபத்தில் சிக்கியுள்ளது என அதிபர் புஷ் அறிவித்துள்ளார்.

நாட்டைப் பாதுகாக்கும் வேலை இன்னமும் பூர்த்தியாகவில்லை என்று கூறியுள்ள அதிபர், தேசிய புலனாய்வுப் பணிப்பாளர் என்ற புதிய பதவியொன்றை உருவாக்கும்படி தாம் காங்கிரஸ் சபையைக் கேட்டுள்ளதாகவும் கூறினார்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி பயங்கரவாத தாக்குதல் பற்றி ஆராய்ந்த ஆணைக்குழு, அமெரிக்கப் புலனாய்வுத்துறையில் சீரமைப்பு செய்யவேண்டுமென வற்புறுத்தியிருந்தது.

அமெரிக்காவில் நிதி நிறுவனங்கள் மற்றும் மூன்று முக்கிய அமெரிக்க நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.


அபாயத்தை எதிர்கொள்வதற்காக எம்மால் ஆன அனைத்தையும் நாம் செய்து வருகின்றோம் என்று புஷ் கூறினார்.

வாஷிங்ரன், நியூயோர்க் மற்றும் நெவார்க் நகரங்களின் சில பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நகரங்களில் பல கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு அல்கெய்டா தீவிரமாகத் திட்டமிடுவதில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்ததையடுத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க தேர்தல் வாக்காளர்கள் மீது தாக்குதல் நடத்த அல்கெய்டா தீவிரவாதிகள் விரும்புவதால் உயர்மட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் நவம்பர் மாதம் தேர்தல் முடியும் வரை நீடிக்கும் என்று வாஷிங்ரன் பொலீஸ் தலைவர் சார்ள்ஸ் ராம்சே கூறினார்.

நியூயோர்க்கில் பொலீஸார் 'மன்ஹற்றன்' வீதியை மூடிவிட்டனர். வால்ஸ்ரிட்டில் நிதி நிறுவனங்கள் இருக்கும் பகுதியை நோக்கிய பாலங்கள், சுரங்கப் பாதைகள் வழியாக ட்ரக்குகள் செல்வதையும் தடுத்துவிட்டனர்.



தரையில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, அதற்கு பக்கபலமாக ஆகாயத்தில் உலங்கு வானூர்த்திகளின் ரோந்து நடவடிக்கையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உடல் கவசம் அணிந்த காவல் படையினர் துப்பாக்கிகளுடன் வாகனக் குண்டுத் தாக்குதல் இரசாயன உயிரியல் குண்டுதாக்குதல்களை எதிர்கொள்ளும் விதத்தில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (ப-8)

# முன்னணி பல்கலைக்கழகங்களின் சான்றிதழ்கள் விற்பனை

லண்டன்,ஓக.4

பிரிட்டனில் பிரபல பல்கலைக்கழகங்களான ஒக்ஸ்போர்ட், ஸ்வான்சீ உள்ளிட்ட பல்வேறு முன்னணி பல்கலைக்கழகங்களின் இளம் கலை, முதுகலைப் பட்டப்படிப்புச் சான்றிதழ்கள் நல்ல விலைக்கு விற்கப்படுவதாக 'தி ஒப்சேவர்' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாகத் தங்களிடம் ஆதாரம் உள்ளதாகவும் அந்த நாளேடு தெரிவிக்கிறது. இந்தப் பல்கலைக்கழகங்கள் கடும் நிதி நெருக்கடியில் உள்ளன. இந்நிலையில், மாணவர்களுக்குக் குறைவான புள்ளிகள் அளித்துத் தேர்வில் தோல்வியுறச் செய்யுமாறு தேர்வுத் தாள்களைத் திருத்தும் விரிவுரையாளர்களுக்கு இந்தப் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் கட்டளையிட்டுள்ளனர்; 'தி ஒப்சேவர்' நாளேடு கூறியுள்ளது.

முறைகேட்டை வெளியே சொன்னால் வேலை பறிபோய் விடும் என்ற அச்சத்தால் பல்கலைக்கழக ஊழியர்களும் விரிவுரையாளர்களும் உள்ளனர்.

இவ்வாறு அதிக மாணவர்கள் பரீட்சையில் சித்திபெறாமையால் தங்களது கல்வி நிலையத்தில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவதால், சித்திப்புள்ளி பெற ஓரிரண்டு புள்ளிகள் குறைவாக இருந்தாலும் அவற்றைப் போட்டு மாணவர்ளைச் சித்திபெறச் செய்து வைக்குமாறு போன்மௌத் பல்கலைக்கழகத்தின் வடிவமைப்பு, பொறியியல் துறையின் பேராசிரியர் ரிச்சர்ட் வைன் விரிவுரையாளர்களுக்கு ஈமெயில் அனுப்பியுள்ளதாகவும் 'தி ஒப்சேவர்' நாளேடு குறிப்பிட்டுள்ளது. (8)

# ஈராக்கிற்குப் படை அனுப்ப பாகிஸ்தான் அரசு மறுப்பு

ஈராக்கில் பாதுகாப்புப் பணிக்கும், மறுசீரமைப்புப் பணிக்கும் படைகளை அனுப்ப பாகிஸ்தான் முதலில் சம்மதம் தெரிவித்திருந்தது. இந்த நிலையில், பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு பொறியியலாளர் மற்றும் ஒரு லொறிச் சாரதி ஆகியோரை ஈராக் தீவிரவாதிகள் கடத்திச் சென்று சுட்டுக்கொன்றனர்.

இது பாகிஸ்தானுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து ஈராக்குக்குப் படைகளை அனுப்பும் முடிவைப் பாகிஸ்தான் வாபஸ் பெற்றுக்கொண்டது. ஐ.நா.சபைக்கும், அமெரிக்காவுக்கும் தனது முடிவை பாகிஸ்தான் தெரிவித்துவிட்டது.

வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் மசூத்கான் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த நிலையில் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத இயக்கத்துக்கும் பின்டேலனின் அல்-கெய்டா அமைப்புக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்திக்கொடுத்ததாக கணனிப் பொறியியலாளர் ஒருவரைப் பாகிஸ்தான் பொலீஸார் கைது செய்துள்ளனர். (8)

# பியர் உற்பத்தியை அதிகரிக்கிறது சீனா

சீனாவில் பொருளாதாரமும் வேகமாக முன்னேறி வருகிறது. அதேபோல் பியர் உற்பத்தியும் வேகமாக அதிகரித்து வருகிறது. ஓர் ஆண்டில் சீனாவில் 6 சதவீதம் பியர் உற்பத்தியும், ஏற்றுமதியும் அதிகரித்து இருக்கிறது. அந்நிய முதலீடுகளும் அங்கு அதிகரித்துள்ளது.



ஆனால், பியர்- குடிப்பவர்கள் எண்ணிக்கை மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகக்குறைவுதான். சீனாவில் சராசரி ஒருவர் ஒரு ஆண்டுக்கு 19 லற்றர் பியர் குடிக்கிறார். ஜப்பானில் சராசரி ஒரு ஆண்டுக்கு ஒருவர் 50 லற்றர் பியர் குடிக்கிறார். அமெரிக்காவில் சராசரி ஒருவர் 84 லீற்றர் பியர் குடிக்கிறார். (8)

# 17 ஆயிரம் அடி உயரத்தில் ரயில்பாதை; சீன அரசு அமைத்து வருகின்றது

உலகின் கூரை என வர்ணிக்கப்படும் திபெத் பீடபூமியில் ரயில் பாதை அமைத்து சீனாசாதனை படைத்துள்ளது. சீனாவில் உள்ள கோல்மட் என்ற இடத்தில் இருந்து திபெத்தில் உள்ள லாசா வரை 17 ஆயிரம் அடி உயரத்தில் ஆயிரத்து 100 கிலோமீற்றர் தொலைவுக்கு இந்தப் பாதை அமைக்கப்படுகின்றது. மொத்தத்தூரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரயில்வேப்பாலங்கள் உள்ளன. இந்தப்பாதை அமைக்க சீன அரசு செலவழித்துள்ள தொகை மொத்தம் 18 ஆயிரம் கோடிரூபா. இந்த ரயில் பாதை அமைக்க மொத்தம் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இரவு பகலாய் வேலை செய்து வருகின்றனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப்பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. வரும் 2007 ஆம் ஆண்டு முதல் இந்தப்பாதையில் ரயில்கள் சேவையில் ஈடுபடும்.

இந்த ரயில் பாதை அமைக்க 50 ஆண்டுகளுக்கு முன்னரே திட்டமிட்டது சீனா. (8)

# அமெ. இராணுவம் ஈராக்கில் இருக்கும் வரை இஸ்லாமியப் படை அனுப்புவது சாத்தியமாகாது

திரிப்போலி,ஓக.4

ஈராக்கில் தலைதூக்கியுள்ள பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அங்கு இஸ்லாமிய படையொன்று அனுப்பப்பட வேண்டுமென சவூதி ஆலோசனை கூறியிருந்தது. எனினும், அமெரிக்கக் கூட்டுப்படை அங்கு இருக்கும் வரை, இது சாத்தியப்படாது என்று லிபிய ஜனாதிபதி கடாபி அறிக்கையொன்றின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

லிபிய அரசு செய்தி நிறுவனம் கடந்த ஞாயிறுக்கிழமை இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அந்நியப் படைகள் முதலில் வெளியேற வேண்டும்.

அதுவரை அரேபிய முஸ்லிம் துருப்புக்கள் அங்கு அனுப்பப்படக்கூடாது. ஐ.நாவின் முடிவிற்கிணங்க வேறு படைகளும் நிறுத்தப்படலாம் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

அரேபிய முஸ்லிம் துருப்புக்கள் தற்போது அனுப்பப்பட்டால், அங்கு நிலைகொண்டுள்ள அமெரிக்கக் கூட்டுப்படையில் இவையும் ஓர் அங்கமாகிவிடுவதற்கான அபாயமுண்டு எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

ஈராக்கில் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு பாகிஸ்தான், மலேஷியா, அல்ஜீரியா, பங்களாதேஷ், மொராக்கோ ஆகிய முஸ்லிம் நாடுகளின் துருப்புகளைக் கொண்ட படையொன்று அனுப்பப்பட வேண்டுமென சவூதி அரேபியா ஆலோசனை தெரிவித்திருந்தது. (8)

# பணயக் கைதியை சுட்டுக்கொல்லும் நேரடிக் காட்சி இணையத் தளத்தில்







துபாய்,ஓக.4

ஈராக்கில் பணயக்கைதி ஒருவரை தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லும் காட்சி இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

ஈராக்கில், வெளிநாட்டவர்களை பணயக் கைதிகளாக கடத்திச் செல்லும் தீவிரவாதிகள் அவர்களை கழுத்தை வெட்டியும் துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்து வருகிறார்கள். இந்தக் காட்சிகளை அரபு நாட்டு தொலைக்காட்சிகள் மூலம் தீவிரவாதிகள் ஒளிபரப்பி வந்தனர். இடையில் சில படுகொலைகள் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பாகவில்லை.

இப்போது, துருக்கி நாட்டைச் சேர்ந்த பணயக் கைதி ஒருவரை தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற காட்சி இணையத் தளத்தில் வெளியாகி உள்ளது. எப்போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற விவரம் அறிவிக்கப்படவில்லை.

இஸ்லாமிய இணையத்தளத்தில், இந்த வீடியோ காட்சி வெளியானது.

அந்த துருக்கிய பணயக் கைதி தனது பெயர் முரத்ஸ் என்றும் அங்காராவை சேர்ந்தவர் என்றும் அறிமுகப்படுத்திக் கொள்கிறார். 'பிலின் தூர்' என்ற துருக்கி கம்பனியில் பணி புரிந்து வந்ததாகவும் அந்தக் காட்சியில் கூறுகிறார். துப்பாக்கி ஏந்திய 3 தீவிரவாதிகளின் முன்னால் அவர் மண்டியிட்டு அமர்ந்து கொண்டு ஒரு அறிக்கை வாசிக்கும் காட்சியும் இடம் பெற்று இருந்தது.

"...ஈராக்கியர்களை அமெரிக்க இராணுவத்தினா கொடுமைப்படுத்துவதை என் கண்களால் பார்த்தேன். நான் சிறிது பணம் சம்பாதிக்கவே இங்கு வந்தேன். துருக்கிக் குடிமக்களுக்கு நான கூறும் அறிவுரை எல்லாம் இங்கு வந்து அமெரிக்கர்களுக்கு ஆதரவாக ஆயுதம் ஏந்தாதீர்கள் என்று அந்த பணயக் கைதி கூறினார்.

துருக்கி கம்பனிகள் அனைத்தும் ஈராக்கில் இருந்து வெளியேற வேண்டும் என்று உறுதியாக அவர் கூறுவதும் இடம்பெற்று இருந்தது.

அறிக்கையை படித்து முடித்ததும், தீவிரவாதிகளின் தலைவன் போலக் காட்சி அளித்தவன் கைத் துப்பாக்கியை எடுத்து பணயக் கைதி தலையின் பக்கவாட்டில் சுட்டான். அப்படியோ வீழ்ந்த பணயக் கைதியின் தலையில் மீண்டும் இரு முறை சுட்டான். உடனே தலையில் இருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்த கோரக் காட்சியும் இணையத்தளத்தில் வெளியானது.

தீவிரவாதிகளுக்குப் பின்னால் கறுப்பு நிறப் பதாதை ஒன்று இருந்தது. அதில் 'அல்-கெய்டாவுடன் இணைந்த தாஹித் மற்றும் ஜிகாத் என்ற ஜோர்டான் தீவிரவாத இயக்கத்தின் பெயர் இடம்பெற்றிருந்தது. கடந்த சனிக்கிழமை துருக்கியைச் சேர்ந்த இரு லொறிச் சாரதிகளைக் கடத்திச் சென்றதாக அந்த அமைப்பு அறிவித்திருந்தது.

ஆனால், சுட்டுக்கொல்லப்பட்ட பணயக் கைதி அந்த இருவரில் ஒருவரா? என்பது தெரியவில்லை. அங்காராவை சேர்ந்த அந்த நிறுவனத்தின் நிர்வாகியிடம் இதுபற்றி கேட்டபோது தங்கள் நிறுவனத்தில் முரத்ஸ் என்பவர் வேலை செய்ததை ஒப்புக்கொண்டார். அதேநேரத்தில் அவர் கொல்லப்பட்டதாக எந்தத் தகவலும் இல்லை என்று தெரிவித்தார். (8)

# குழந்தைகளுக்கான மொபைல் போன்கள்

மொபையில் போன்கள் அதிகமாகப் பயன்படுத்துபவர்கள் சீனா மற்றும் தென்கொரிய நாட்டவர்கள் தான். குறிப்பாக தென்கொரியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையான



4.9 கோடியில் 75 வீதத்தினர் மொபைல் போனகள் வைத்திருக்கின்றார்கள்.

பெரும்பாலானவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட செல்போன்கள் வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல குழந்தைகள் கூட செல்போன்கள் வைத்திருக்கிறார்கள். (8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 ★ 04 ★ 1935



மறைவு 27 ★ 07 ★ 2003

அமரர்

### பொன்னம்பலம் ஆறுமுகம்

பண்பையும் பாசத்தையும்
பரிவுடன் காட்டிய எம் அன்புத் தெய்வமே!
எம்மைப் பரிதவிக்க விட்டு உங்கள் உடல்
பிரிந்தாலும் எங்கள் நினைவு உங்களோடு.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
- குடும்பத்தினர்.

*25/1, வைரவர் கோயில் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (34872)(43-13-16)


Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6333951 முதல் 6346543 வரை
சீட்டிழுப்பு இல. 55 திகதி 02-08-2004

வெற்றி எண்கள் 995349 சுப்பர் எண் 10

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,41,83,400/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,41,83,400/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 106 | 5,000/- | 5,30,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,111 | 500/- | 5,55,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,066 | 50/- | 5,53,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,09,644 | 10/- | 10,96,440/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 1,000/- | 1,08,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,113 | 100/- | 1,11,300/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,962 | 20/- | 2,19,240/- |
| மொத்தம் | 1,34,132 | | 56,78,780/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 56,78,780/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,44,91,025/-

தொடர் இல. 7307723 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 05 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செய்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

6337741-2-33
6340754-5-65
6337047-4-06
6338364-2-12
6343721-2-91


## மரண அறிவித்தல்

### திருமதி அருளப்பு இராசம்மா



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளப்பு இராசம்மா அவர்கள் நேற்று (03.08.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்புவின் அன்பு மனைவியும் அழகரட்ணம் (ப.நோ.கூ.சங்கம் யாழ்ப்பாணம்), லீலாமலர், புஸ்பராணி, நிற்குணானந்தம் (ஜேர்மனி), பேரின்பநாயகி, சகாயநாயகி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திரேசா பேரின்பநாயகம் (கொழும்பு), உதயநாதன், பபி (ஜேர்மனி), மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இன்று (04.08.2004) புதன்கிழமை பி.ப.3.00 மணியளவில் புனித மிக்கேல் தேவாலயத்தில் இடம்பெறும் ஆராதனையின் பின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.அழகரட்ணம் (மகன்)
(யா.ப.நோ.கூ.சங்கம்)

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (34875)(43-13-16)

# விபுலானந்தர் நினைவு தினத்தை ஒட்டி ஆசிரியர்கள் மத்தியில் போட்டிகள்

வலி.தெற்கு,ஓக.4

விபுலானந்தர் நினைவு தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்கள் மத்தியில் கட்டுரை, கவிதை, சிறுகதை, விமர்சனம் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன.

இவ்வருடம் நடைபெறவுள்ள ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பாடசாலை ஆசிரியர்களை உற்சாகப்படுத்தும் முகமாக 'விளக்கு' சஞ்சிகையினரால் இப்போட்டிகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு முதற்பரிசாக 15ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 10ஆயிரம ரூபாவும், மூன்றாம் பரிசாக 5ஆயிரம் ரூபாவும் பணப்பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.

இதேவேளை -

விமர்சனப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே 5ஆயிரம், 3ஆயிரம், 2ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்படவுள்ளது.

இப்போட்டிகளில் தெரிவு செய்யப்படும் தரமான ஆக்கங்கள் 'விளக்கு' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். இவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டிகளுக்கான முடிவு திகதிகள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன.

(ஜ-13-152)

# பெண்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம்,ஓக.4

வடக்கு - கிழக்கு புற்றுநோயாளர் உதவி மையத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனைகள் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இல.69,பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் இடம் பெறவுள்ளன.

புலம்பெயர்ந்து லண்டனில் வாழும் டாக்டர்கள் அமைத்துள்ள 'கேன்' அமைப்பைச் சேர்ந்த பெண் மருத்துவக் குழுவினர் பரிசோதனைகளை மேற்கொண்டு சந்தேகங்களுக்குப் பதிலளிப்பதுடன், ஆலோசனைகள் பலவற்றையும் வழங்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் பெண்கள் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ளலாம் எனவும், மார்பகக்கட்டிகள் இருப்பதாக உணர்பவர்கள், முறையில்லா விதத்தில் இரத்தப்போக்கு இருப்பதாக சந்தேகிப்பவர்கள் மற்றும் உட்ற் கோளாறுகளால் சிரமப்படுபவர்கள் இதில் கலந்துகொண்டு பலன் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (10-201)

## ஆடிவேல் விழா

யாழ்ப்பாணம்,ஓக.4

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலயத்தில் ஆடி வேல் விழா இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி சிவகாமிஅம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும் ரதபவனியுடன் வாண வேடிக்கைகள், கரகாட்டம்,காவடி ஆட்டம், குதிரை ஆட்டம், பொம்மை ஆட்டம், சீனடி சிலம்படி, தீப்பந்த விளையாட்டு என்பனவும் இடம்பெறுகின்றன.

மேற்படி விழாவைத் தொடர்ந்து சிவஸ்ரீ சோ.உமாரமணக் குருக்களின் பாட்டுக் கச்சேரியும இடம்பெறும். இவருடன் இணைந்து அ.ஜெயராமன் (வயலின்), க.கண்ணதாசன் (மிருதங்கம்), இரா.சிவராமன் (தபேலா), கணேசஸ்ரீ குகன் (ஓகன்), சதீஸ்குமார் பாலசம்ரஷ்ணா (மொகர்சிங்) ஆகியோர்களின் இசைக்கச்சேரியும் இடம்பெறும். (10-201)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஓக.4

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை அணியும், இணுவில் இந்து விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (10-86)

★ ★

வலி.வடக்கு,ஓக.4

சுன்னாகம் மயிலணி வடக்கு வளர்பிறை சனசமூக நிலையமும், வளர்பிறை விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் வளர்பிறை முன்பள்ளி விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய விளையாட்டு மைதானத்தில் தலைவர் மா. இராசரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி ச. சொக்கலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (10-86)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக4

கல்வியங்காடு ஸ்ரீபத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர் ஆலயத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு தலைவர் சி.இராசரத்தினம் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10-7)

## முன்பள்ளி ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக.4

பெண்கள் வலுவூட்டல் சமூக நலன் அமைச்சு நடத்தும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 14 ஆம், 15ஆம்,16 ஆம் திகதிகளில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களுடைய வாண்மை விருத்தியினை மேம்படுத்துவதற்காக ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வில் யாழ்.பிரதேச செயலர் பிரிவிலிருந்து 10 முன்பள்ளி ஆசிரியாகளும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 15 ஆசிரியர்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலிருந்து 20 ஆசிரியர்களும் கலந்துகொள்ளவுள்ளனரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-13)

### போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)
### கேள்வி அறிவித்தலில்
### திருத்தம்

**நேற்றைய உதயனின் 8ஆம் பக்கத்தில் யாழ்.மாவட்ட கேள்விச் சபைத் தலைவரும் அரச அதிபருமான செ.பத்மநாதனால் வெளியிடப்பட்ட -**

**போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (கார்ப்) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்ட யாழ். மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல-02 என்னும் விளம்பரத்தில் -**

**ஒப்பந்த இனங்காட்டல் இலக்கங்களில் தவறு நேர்ந்துள்ளது. அந்த இலக்கங்கள் அனைத்தும் JF என்ற ஆங்கில எழுத்துக்களுடன் ஆரம்பிக்க வேண்டும். தவறுதலாக அவை JE என்று அச்சாகி உள்ளன. திருத்தி வாசிக்கவும்.**

**இதே விளம்பரத்தில் பன்னிரெண்டாவது ஒப்பந்தத்தின் பெயர் 'வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் 5.48கி.மீ. அளவுடைய கிராமிய வீதி புனரமைத்தல்' என்று இருப்பது தவறாகும். அது 'வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் 5.48கி.மீ. அளவுடைய கிராமிய வீதி புனரமைத்தல்' என்று அதனையும் திருத்தி வாசிக்கவும்.**

*தவறுகளுக்கு வருந்துகின்றோம்.*

### நல்லூர் பிரதேச சபை
### மேல் மாடிக்கடைக்கான கேள்வி அறிவித்தல்

**நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிட்ட இலக்கங்களைக் கொண்ட கடைகள் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள் 16.08.2004ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 12.30 மணிவரை நல்லூர்ப் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.**

**கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடையின் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல்வேண்டும். இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.**

**கேள்விப்பத்திரங்கள் குறிப்பிட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும், மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமும் செலுத்துவதன் பேரில் நல்லூர்ப் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 13.08.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் மூன்று நாள்களுக்குள் கிரயத் தொகை (Key Money), வற்வரி (Vat) என்பவற்றின் முழுத்தொகையையும் செலுத்தி ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை நல்லூர்ப் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.**

**குறிப்பு:-**

*1) கேள்விப்பத்திரத்தொகையுடன் 15% வற் செலுத்தப்படல் வேண்டும்.*
*2) ஒரு விண்ணப்பப்படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும்.*
*3) தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக தொகையின் 15% வற் செலுத்தப்படல்வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட வேண்டும்.*
*4) குறிப்பிடப்பட்ட கடைகளுக்குரிய ஆகக்குறைந்த கேள்வித்தொகைக்குக் கீழ்க் குறிப்பிடப்படும் கேள்விக்கான கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.*
*5) தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும்.*

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கிரயத்தொகை (வற் தவிர்ந்த) |
|---|---|---|---|
| 06 | 500/- | 10000/- | 108000/- |
| 07 | 500/- | 10000/- | 157500/- |

**பொன்னையா வைரமுத்து,**
**செயலாளர்,**
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி. 02.08.2004

(சி-36407)(33-13-16)

# 7 ஆவது தடவையாக யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணி சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஓக.4

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகத் தெரிவு செயயப்பட்டது.

இச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த 24ஆம் திகதி இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த அணிகள் பங்குபற்றிய இச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணி தனது முதற்சுற்று ஆட்டங்களில் அம்பாறை அணியுடன் 30:2 என்ற அடிப்படையிலும், வவுனியா அணியுடன் 49:25 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டது.

இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை 53:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது.

இந்த வெற்றியின் மூலம் தொடர்ந்து 7ஆவது தடவையாக வடக்கு - கிழக்கு மாகாணச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செல்வி சங்கீதா திருச்செல்வம் தலைமையில் களமிறங்கிய இந்த அணியின் பயிற்றுநராக திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் கடமையாற்றியுள்ளார். (10-5)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.4

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. கிழக்குப் பிரதேச சபையால் நடத்தப்படும் சனசமூக நிலையங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணி நீர்வேலி கணேஷா ச.ச.நிலைய அணி எதிர் உரும்பிராய் புனித மைககல் ச.ச. நிலைய அணி.

மாலை 4.30 மணி முத்தமிழ் ச.ச.நிலைய அணி எதிர் ஆவரங்கால் லிங்கன் ச.ச.நிலைய அணி.

# நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கைக்கு மேலும் 9பேர் தெரிவு

இலங்கை நூலகர் சங்கத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் தரம் - 1 டிப்ளோமா கற்கைநெறிக்கு மேலும் 9பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களில் 9பேர் இதுவரையில் தமது பதிவுகளை மேற்கொள்ளாத காரணத்தினால் அவர்களது இடத்திற்கே இந்த 9பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். என்று இலங்கை நூலகச்சங்க இணைப்பாளர் த.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

கே.வாணிமுகுந்தன் (பருத்தித்துறை), கே. சஞ்சீவனி (தாவடி), எஸ்.கிருஸ்ணவதனி (திருநெல்வேலி), கே.சுகிர்தா (உரும்பிராய்), எஸ். சாம்னி (நல்லூர்)-

ஏ.தர்சினி (பருத்தித்துறை), பி.தவகிருபா (கொக்குவில்), வீ.நிரஞ்சன் (கோப்பாய்), ஜே. பவித்திரா (யாழ்ப்பாணம்). (10)

# வீட்டார் ரீ.வி. பார்க்கச்செல்ல வீட்டினுள் திருடர் புகுந்தனர்

தென்மராட்சி, ஆக.4

தொலைக்காட்சியில் திரைப்படம் பார்க்க அயல்வீட்டுக்கு குடும்பமாக சென்றவேளை அவர்களது வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் நகைகள் மற்றும் பணத்தை அபகரித்துச் சென்றனர். இந்தச் சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

பிரஸ்தாப வீட்டில் இருந்தவர்கள் தொலைக்காட்சியில் திரைப்படம் பார்க்க அயல் வீடொன்றுக்குச் சம்பவ தினம் இரவு சென்றிருந்தனர். அவர்கள் திரும்பி வநதபோது உடைப்பெட்டி உடைக்கப்பட்டு, அதனுள் இருந்த நகைகள் மற்றும் ரொக்கப் பணம் அபகரிக்கப்பட்டிருந்ததைக் கண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் தட்டியை அறுத்தே திருடர்கள் உள்ளே புகுந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-31-117)

# கொடிவாரத்தில் ரூ. 3,600,00 சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.4

இளைஞர் கொடிவாரத்தின்போது யாழ். மாவட்டப் பாடசாலைகளிலிருந்து மூன்று லட்சத்து 60ஆயிரம் ரூபா நிதி சேகரிக்கபட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 23ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 7ஆம் திகதி வரை தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் கொண்டாடப்பட்ட இளைஞர் அபிவிருததிக்கான கொடிவாரத்தின்கீழ் யாழ்.மாவட்டப் பாடசாலை மட்டத்திலான இளைஞர் கழகங்களூடாக இந்த நிதி சேகரிக்கப்படடுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சென்.சாள்ஸ் வித்தியாலயம், திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, பருத்திததுறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி ஆகிய எட்டுப் பாடசாலைகள் சேர்ந்து இந்த நிதியினை சேகரித்துள்ளன.

சேகரிக்கப்பட்ட நிதி குறித்த பாடசாலைகளின் பங்களிப்பின்படி அந்தப் பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

சேகரிக்கப்பட்ட நிதி பாடசாலைகளுக்கு அடுத்தமாத இறுதியில் வைபவரீதியாகக் கையளிக்கப்படவுள்ளது என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.தட்சணாமூர்த்தி தெரிவித்தார். (ஐ-7)

# கர்ப்பிணியுடன் சேஷ்டைபுரிய முயன்ற நபர் விரட்டியடிப்பு

காரைநகர்,ஓக.4

வீட்டினுள் உறங்கிக்கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணுடன் சேஷ்டை புரியமுற்பட்ட நபர் ஒருவர் விரட்டப்பட்டார்.

காரைநகர், வலந்தலைப் பகுதியில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி பெண்ணும் அவரது கணவரும் வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். அப்போது வீட்டுக்குள் நுழைந்த நபர் ஒருவர் அப்பெண்ணிடம் சேஷ்டைபுரிய முயற்சித்தார். அப்போது விழித்துக்கொண்ட பெண் கூக்குரலிட்டார். அவரது கணவரும் விழித்துகொண்டு அந்த நபரைப் பிடிக்க முற்பட்டார். இதனையடுத்து அந்த நபர் அங்கிருந்து ஓடித்தப்பினார். பின்னர் கணவனும், மனைவியும் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தபோது சைக்கிள் ஒன்று அங்கு நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டனர். சிறிது நேரத்தில் துப்பாக்கியுடன் சீருடையணிந்த ஒருவர் அங்கு வந்து சைக்கிளை எடுததுச்சென்றார்.

இச்சம்பவம் தொடர்பாக காரைநகரில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-10-73)

# கள்ள நோட்டுப் புழக்கம் வவுனியாவில் தாராளம்

வவுனியாவில் கள்ள நோட்டுகள் அதிகளவில் புழக்கத்தில் உள்ளன என்றும் -

எனவே, பொதுமக்கள் இது தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்குமாறும், - வங்கி வட்டாரங்கள் கேட்டுள்ளன.

வவுனியாவில் ஆயிரம் ரூபா, நூறு ரூபா பெறுமதியான பணநோட்டுகள் போன்று உள்ள கள்ள நோடடுகள் அதிகளவில் உள்ளமை தொடர்பாக வவுனியா பொலீஸாருக்கும் தகவல்கள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான கள்ள நோட்டுகள் வங்கிகளுக்கு வருகின்றன என்றும் - அவ்வாறு வரும் கள்ள நோட்டுகளை தாம் அழித்துவிடுவதாகவும் - வங்கி ஊழியர்கள் கூறுகின்றனர்.

வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு சில நாள்களில் மட்டும் 15 ஆயிரம் ரூபாவுக்கான நோட்டுகள் வந்துள்ளன. எனவே, இது தொடர்பாக பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர். (ஒ-164)


## கணனித் தொகுதி அன்பளிப்பு

அமரர் ஐயாத்துரை சின்னத்தம்பி
நினைவாக
யா/கரணவாய் பொன்னம்பல
வித்தியாலயத்திற்கு கணனித்தொகுதி
அன்பளிப்புச் செய்தல்

- காலம்: இன்று [04.08.2004] புதன்கிழமை நண்பகல் 12.30 மணி
- அன்பளிப்புச் செய்பவர்: திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி குடும்பத்தினர்
- அன்பளிப்புப் பெறுபவர்: திரு. சி.நந்தகுமார் [பிரதிக் கல்விப்பணிப்பாளர் - வடமராட்சிக் கல்விவலயம்]

- அதிபர், ஆசிரியர்கள்.
யா/கரணவாய் பொன்னம்பல
வித்தியாலயம், கரவெட்டி. (36421)(12-13-16-38)

## ஓவ் (f)செட் மெசின் மைண்டர் தேவை

- யாழ்.நகரில் இயங்கிவரும் தனியார் அச்சகம் ஒன்றிற்கு அனுபவமுள்ள
- ஓவ்(f) செட் (டேவிசன்) மெசின் மைணடர்
- கணனி இயக்குநர் (இருபாலாரும்)
- பைண்டர் உடன்தேவை. நேரில் சநதிக்கவும்.

தூயா அச்சகம்
கொம்பியூட்டர் ஓவ்செட் பிறிண்டேர்ஸ் 138, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (நாவலர் பாடசாலை முன்பாக) (36423) (38-13-16) T.P.2881

## வேலையற்றபட்டதாரிகள் பதிவுகள் மேற்கொள்ளல்

காலம்:- இன்று (04-08-2004) புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 4மணிவரை.
இடம்:- சங்கப் பணிமனை, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
விடயம்:- பட்டச் சான்றிதழ் (Statement) பிரதியுடன் பணிமனைக்குச் சமுகமளிக்கவும். பிரதேச செயலகங்களில் பதிவு செய்யாதவர்கள் கட்டாயமாக தங்கள் பதிவினை மேற்கொள்ளவும்.
(34887) (38-13-16) -தலைவர்.

## குழுப்படம்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட, பொருளியல்துறை இறுதி வருட மாணவர்களுக்கான குழுப்படம் இன்று (04.08.2004) பி.ப. 4.30 மணிக்கு எடுக்கப்படும்.
(34861) (38-13-16) -வருடப் பிரதிநிதி.

## கணேசன் சென்ரர் (இணுவில்)

வேலையாள் தேவை

தையல்வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு:
கணேசன் சென்ரர்,
K.K.S. வீதி,
இணுவில்.
(34883) (38-13-16)

## ராஜா யாழ்ப்பாணம்



அர்ஜுன். மீனா. நெப்போலியன நடித்த
அன்பு சகோதரன்
புதியநேரம்: 10.30,2.30,6.30.
06.08.2004 முதல் குத்து
(சி-36364)(12)

## நாகம்ஸ் சுன்னாகம்



ரஜனிகாந்த, நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
பாட்ஷா
காட்சிகள்: 11.00,3.00,7.00(புநே.)
அடுத்த வெளியீடு: சரத்குமார் நடித்த மானஸ்தன்
(C/36415) (12)

## நிரஞ்சனாஸ் சங்கானை

ஜூனியர் சிவாஜி துஷ்யந்த், சுபா, பூஜா நடித்த
மச்சி
தினசரி: 11.00, 2.45, 6.00 (புநே)
வெள்ளி, சனி, ஞாயிறு
Saving Private Ryal (இரவு 8.45) (புநே)


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம் (அராலி)



அராலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் நீண்டகாலம் மலேசியாவில் தொழில் புரிந்தவருமான வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம் 30.07.2004 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - கைராசி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - திரவியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கிருஷ்ணராணி அவர்களின் அன்புக் கணவரும் மகேஸ்வரி (இந்திரா), சகுந்தலா, தவமணி, மோகா, சகிலா, லதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மு.இராசையா (கனடா), சி.முத்துக்குமார் (ஜேர்மனி), வே.செல்வராசா (குணம் - இலங்கை), க.அப்பாத்துரை (சுவிஸ்), செ.இராசேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் இந்துமதி, ஜெயமதி, மாலா, நாகசெல்வன், தனுஷ், தர்சியா, தமிழ்செல்வன், அனித்தா, காண்டீபன், நவீதா, ஜேம்ஸ், றூத், எஸ்ரர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2004) புதன் கிழமை பி.ப.1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு,
செட்டியார் மடம். (34855) (16-13-33-38)

தகவல்:
மருமக்கள்.

## சின்னத்தம்பி மயில்வாகனம்



பச்சந்தை, பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மயில்வாகனம் 01.08.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னப்பிள்ளையின் மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-அருமைப்பிள்ளையின் மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் கனடாவில் வசிக்கும் கிரிஜன், துஷந்தன், மைதிலி, கௌசி, மருபன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தங்கம்மா, கார்த்திகேசு, காலஞ்சென்றவர்களான மீனாட்சியம்மா, நல்லதம்பி, நந்தவனம், பொன்னையா, பார்வதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இலட்சுமிப்பிள்ளையின் உடன்பிறவாச் சகோதரனும் பரமேஸ்வரி, சரஸ்வதி, யோகலட்சுமி, புஸ்பமலர், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, செல்லம்மா, கந்தசாமி, திருநாவுக்கரசு, பார்வதி, இராசையா ஆகியோரின் மைத்துனரும் கணேசமூர்த்தி, சபாரட்ணம், யோகராசா, கலாநிதி, ஜெயகௌரி, பாலேஸ்வரி, பாலேஸ்வரன், காலஞ்சென்றவர்களான அருந்தவராணி, கருணாநிதி, ஜெயபாலன், வரதராசா ஆகியோரின் மாமனாரும் ரவீந்திரநாதன், தவறஞ்சினி, கலாநாயகி, யோகநாதன், கலைவாணி, ஸ்ரீபாஸ்கரன், பாஸ்கரன், சுதாகரன், கலைவதனி, பழனிதாசன், தங்கரதி, வசந்தி, வினோதினி, ஜெகவினோதன், லஜீபன், றிசோபன், கார்த்தீகன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2004) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பி.ப.1.00 மணியளவில் பொலிகண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆண்டாவளவு,
கரணவாய் வடமேற்கு,
வல்வெட்டித்துறை. (C36422) (16-13-33-38)

தகவல்:
சி.கார்த்திகேசு
(சகோதரர்)

## செல்லையா காத்தலிங்கம்

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் விசுவமடு, முல்லைத்தீவை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா காத்தலிங்கம் நேற்று (03.08.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் தயாபரன் (லண்டன்), தர்சினி (பொறியியல் பீடம், பேராதனை), நிர்மலன் (முதலாம் வருட மருத்துவபீ ணவன், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னா றுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இ அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரு ற்றுக்கொள்ளவும்.

19/1,தொட்டிய,
விசுவமடு. (3488?) (16-13-38)

தகவல்:
குடும்பத்தினர்.

# கருணாவின் சகாக்களுக்கு பிணை கிடைத்தும் பயனில்லை

மட்டக்களப்பு,ஒக.4

கடந்த மார்ச் மாதம் மட்டக்களப்பு, காத்தான் குடிப் பகுதியில் வைத்து ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட மூவரைப் பிணையில் செல்ல மட்டக்களப்பு நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது. இவர்கள் கருணாவின் சகாக்கள் என்று கருதப்படுகின்றனர்.

எனினும், இவர்களைப் பிணையில் அழைத்துச செல்ல எவரும் முன்வரவில்லை. இதனால், மூவரும் மீண்டும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூவருடனும் கைதுசெய்யப்பட்டவரான சச்சுமாஸ்டர் என அழைக்கப்படும் நபர் கடந்த மாதம் 15 ஆம் திகதி மட்டக்களப்புச் சிறைக்குள் வைத்து சக கைதி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## கல்வி அமைச்சு நடவடிக்கை

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதியின் பணிப்பின்பேரிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு இன்று கூடுகிறது

கொழும்பு,ஒக.4

சமாதான முயற்சிகளுக்கு புத்துயிர் அளிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று காலை 9 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடவிருக்கிறது.

தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க கூட்டமைப்பு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், அரசின் நிலைப்பாடு தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய செயற்பாடு ஆகியன தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயப்படும். (ஒ-3)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச துறைகளில் பொருத்தமான வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமனம் செய்யும் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எந்த ஒரு பட்டதாரிக்கும் இடமளிக்கப்படாததை ஆட்சேபித்தே தாங்கள் இந்தப் போராட்டத்தில் குதித்தனர் என்று கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்காமல் தொடர்ந்தும் புறக்கணிப்பு இடம்பெறுமானால் வெகுஜனப் போராட்டங்களில் பட்டதாரிகள் தொடர்ந்து ஈடுபடும் நிலை உருவாகும் என்றும் வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்றைய முற்றுகைப் போராட்டத்தின் முடிவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

(மகஜர் 5ஆம் பக்கத்தில்) (ஐ-305-405)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரும், ஜே.வி.பி. தரப்பில் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச ஆகியோரும் பங்குபற்றினர்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கப்போகின்றது. இதை அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. எதிர்க்கக்கூடாது; பகிரங்கமாக விமர்சிக்கக்கூடாது என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளின் ஒவ்வொரு கட்ட நகர்வுகள் தொடர்பாகவும் ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கு விளக்கம் அளிக்க அரசுப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கவும் இசசந்திப்பில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் இடம்பெறுபவர்கள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை.

சமாதானப் பேச்சு விவகாரத்தை இரகசியமாக வைக்காமல் - ஒளிவு மறைவின்றி - பேச்சை நடத்தும் நோக்குடன் இந்த ஏற்பாட்டை அரசு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

## வாழைச்சேனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டனர்.

வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகப் பகுதியில் படைமுகாமுக்கு அருகில் ஈ.பி.டி.பியின் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.

தூரத்தில் இருந்து டொங்கான் மூலம் இயக்கப்பட்ட குண்டு ஒன்று அலுவலகத்தில் வீழ்ந்து வெடித்தது என்று ஒரு தகவல் தெரிவித்தது.

தூரத்தில் இருந்து வீசப்பட்ட கிரனேட் ஒன்று வெடித்ததாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என வாழைச்சேனை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஜெயதிலக்க தெரிவித்தார். (க-3)

## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(சைக்கிள்) வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தார் என்றும் -

அப்போது அவரது பின்புறமாக வந்த கனரக வாகனம் அவர்மீது மோதியது என்றும் -

இதில் அவர் தலையில் படுகாயமடைந்து உயிரிழந்தார் என்றும் - கூறப்படுகிறது.

இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனச் சாரதியைக் கோப்பாய்ப் பொலீஸார் கைது செய்தனர். விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-5-15-72)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையாகக் கொண்டு புலிகளோடு பேச்சுக்களை ஆரம்பித்தால் தாங்கள் அரசிலிருந்து வெளியேறிவிடுவோம் என ஜே.வி.பியினர் எச்சரிக்கை வெளியிட்டிருந்தனர்.

இதனையடுத்தே அவ்விவகாரத்தின் அடிப்படையில் பேச்சுக்களை அரசு ஆரம்பிக்குமானால் அரசைக் கவிழவிடாமல் காப்பாற்றும் வகையில் நிபந்தனையற்ற முழு ஆதரவைத் தர ஐ.தே.கட்சி முன்வந்திருந்தது.

ஆனால், ஐ.தே.கவின் இந்த நல்லெண்ண அறிவிப்பை அமைச்சரும், ஜனாதிபதியின் சகோதரருமான அனுரா பண்டாரநாயக்கா அடியோடு நிராகரித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு அரசுக்குத் தேவையில்லை என்றும் அவர் முழங்கினார்.

அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பியும் தன்பங்குக்கு ஐ.தே.க. மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியது.

இந்தப் பின்னணியிலேயே அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் தனது கட்சியின் முடிவு வாபஸ் பெறப்படுவதாக தனது கட்சியின் எம்.பிக்கள் மத்தியில் உரையாற்றுகையில் ஐ.தே.க. தலைவர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

## விண்ணப்பித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரிடம் எடுத்துக்கூறினர்.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்த அமைச்சர் அடுத்த கட்டப் பட்டியலும் வெளியான பின்னர் முறைகேடுகள் குறித்து தனக்கு முறைப்பாடுகள் செய்தால் உடன் நிவாரணம் வழங்கப்படும் என கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார்.

அமைச்சர் தெரிவித்த பிற விடயங்கள் வருமாறு:-

★இரண்டாவது பட்டியல் இம்மாதம் 31ஆம் திகதி வெளியிடப்படும்.

★விண்ணப்பித்த தகுதியான உள்ளூர் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும். இம்மாதம் 30 ஆயிரம் முதல் 35 ஆயிரம் பேர் வரையில் நியமனம் வழங்கப்படும்.

★செப்ரெம்பர் மாதத்தில் சகலருக்கும் ஒரே தினத்தில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

★பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுக்கு முதல் 6 மாதம் ஆங்கிலப் பயிற்சியும் அடுத்த 3 மாதத்துக்கு கணனிப் பயிற்சியும், எஞ்சிய 3 மாதத்துக்கு தொழில்சார் பயிற்சியும் வழங்கப்படும்.

★ஒருவருடப் பயிற்சியை முடித்த பின் பொது நிர்வாக ஆணைக்குழுவால் விண்ணப்பம் கோரப்பட்டு, பரீட்சை நடத்தப்படும். அதில் சித்தி பெறுபவர்களுக்குத் தகுதி அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

★தொழில்நுட்ப நிறுவனங்களிலும் ஏனைய நிறுவனங்களிலும் டிப்ளோமா பெற்றவர்கள் இந்தப் பயிற்சியில் இணைக்கப்படமாட்டார்கள்.

★இந்தப் பயிற்சி முடிந்த பின் ஜி.சீ.ஈ. (உயாதரம்), ஜி.சீ.ஈ. (சாதாரணதரம்) பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களில் 30 ஆயிரம் பேர் பயிற்சிக்கு சேர்க்கப்படுவர். (ஒ-3)

## சமாதானப் பிரேரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம் காங்கிரஸ் மற்றும் ஐ.தே. முன்னணி உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவளித்தனர். ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு குறிப்பாக அதில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.உறுப்பினர்கள் பிரேரணையை எதிர்த்தனர்.

இறுதியில் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது எதிராக 22 வாக்குகளும் ஆதரவாக 17 வாக்குகளும் கிடைத்தன. இதனால் பிரேரணை தோல்வியுற்றது. (ஒ-186)

CATWAS. COM
Computer Academy
15.08.2004 புதிய பிரிவு ஆரம்பம்
Diploma Course
Diploma in Microsoft Office ❑ Diploma in Desktop Publishing ❑ Diploma in Hardware ❑ Web page Designing ❑ Diploma in Video Mixing
Certificate Course
Ms Word XP ❑ Ms Excel XP ❑ Ms Power Point XP ❑ Ms Access XP ❑ Page maker ❑ Corel Draw ❑ Photo shop ❑ Coll 3D ❑ Premiere ❑ Studio
விண்ணப்பங்கள் யாவும் 15.08.2004இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்.
No.26. Somasundram Avenue, Chundikuli, Jaffna. T.P. 021-222-3805
(சி-36409)

## மரண அறிவித்தல்

### சுந்தரம்பிள்ளை அழகராசா



யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை அழகராசா (திருச்சிலுவை கன்னியர்மட சாரதி) 02.08.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - திரேசம்மா தம்பதிகளின் புதல்வரும் ஞானப்பிரகாசம்-எலிசபேத் தம்பதிகளின் மருமகனும் லடிஸ்லாவாவின் கணவரும் கொலஸ்ரிக்கா ஆஷா (வேம்படி மகளிர் கல்லூரி - 2004 கணிதப் பிரிவு), கெவின்போல் (புனித பத்திரிசியார் கல்லூரி 2005 உயிரியல் பிரிவு) ஆகியோரின் தகப்பனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 1/2, புது வீதி, கொய்யாத்தோட்டத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக இன்று பிற்பகல் 3.30 மணிக்கு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1/2, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்.* (34890)(40-11-16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு
அம்பிகா அம்மா
மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தவகையான பிரச்சினைகள் ஆனாலும் ஜாதக ரீதியாக கிரகதோசம் நீக்கி நீங்கள் வாழ்வில் வெற்றிபெறவும். வியாழன் மாற்றம் உங்களுக்கு எப்படி? என்பதை அறிந்து கொள்ளவும்
இன்றே அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்.
சந்திக்கும் இடம்:
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / லிங்கன கூல்பார் அருகில்.
H.P.No. 077 6127444 077 6172644

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்:
3,4,5,6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

## இறுதிச் சடங்கு நேரமாற்றம்




காலஞ்சென்ற எனது
தாயார்
திருமதி
உபகார நீற்றா கொலின்ஸ்
(ராணி)
அவர்களின் இறுதிச் சடங்கு நாளை (05.08.2004) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
அருட்திரு.சாள்ஸ் கொலின்ஸ் (மகன்).

OXFORD ENGLISH ACADEMY
P.K.LANE, POINT PEDRO
இதோ நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்தபடியே மேலும் ஒரு பிரிவு (மாலை நேர வகுப்பு) ஆரம்பம் 07.08.2004 சனி மாலை 6.30 மணி.
SPECIAL ENGLISH FOR WORKERS
வேலைசெய்வோருக்குத் தேவையான சகல ஆங்கில மொழித்திறன்களையும் உள்ளடக்கிய பிரிவு
By: Mr.B.Jothy
(சொற்ப அனுமதிகளே உள்ளன. அனுமதிக்கு முந்துங்கள்.)
(34870)(11-16-40)

324, Palaly Road, Jaffna. கருத்தரங்கு
யாழ் நகரில்!
Networking
Microsoft Certified System Engineer
நிறுவனத்தின் சர்வதேச தர சான்றிதழ்
MCSE
× குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
× Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
× Network Manager, System Administrator தொழில் வாய்ப்புக்கள்
× சான்றிதழ் மூலம் வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
விபரங்கள்
நீங்களும் குறுகிய காலத்தில் சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்.
காலம்: 05-08-2004 வியாழன் மதியம் 1மணி, மாலை 5-30மணி
கருத்தரங்கிற்கான அனுமதி இலவசம் MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.